# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், சர்வதாரி மாசி ௨ (காந்தி ஆண்டு 80) 13-2-'49, ஞாயிறு | இதழ் 28

பயிற்சிமூலம்
பாஷைத் தேர்ச்சி

ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா, (M. A., M. LITT.)

பாடசாலை மாணவர்களின் உபயோகத்துக் கேற்றவிதமாக வித்தியாதரிசினி ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா அவர்களால் உகந்தமுறையில் எழுதப்பட்டது. சிறந்த வசனப் பகுதிகளையும், திருக்குறள், நீதிநெறிவிளக்கம் பாரதிபாடல் முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்ற செய்யுள்களையும் கொண்டது.

விலை ரூ. 1-75 தபாற்செலவு வேறு.

தனலக்குமி புத்தகசாலை : சுன்னாகம்

# வீரத் தமிழன் கௌரவம்

## சிதம்பரனார் கப்பல்

**வீர புருஷரான வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்களின் திருப்பெயரை இந்தக் கப்பலுக்குச் சூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கின்றது.**

**இந்தக் கப்பல் பாரதநாட்டின் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு கடலிற் செல்லும்.**

இவ்வாறு இந்தியப் பிரதம தேசாதிபதி ஸி. இராஜகோபாலாச்சாரியார் சென்ற புதன்கிழமை மாலை 'வ. உ. சிதம்பரம்பிள்ளை' கப்பற் போக்குவரத்தை இந்தியாவின் தென்கிழக்குக் கோடியிலுள்ள சிறு துறைமுகப் பட்டணமான தூத்துக்குடியில் ஆரம்பித்து வைத்தபோது குறிப்பிட்டார். அன்று தூத்துக்குடி என்றுமே கண்டிராத பொலிவுடன் விளங்கிற்று.

பிரதமதேசாதிபதி இராஜாஜி தொடர்ந்து பேசியதாவது:

"சுமார் நானூற்று ஐம்பது வருஷங்களுக்குமுன்னேற்றான் நவீனகாலத்து ஐரோப்பியர்கள் கடற்பிரயாணஞ்செய்து இந்தியாவுக்கு வந்தார்கள். அதற்குமுன் பல்லாயிரம் வருஷங்களாக இந்திய வர்த்தகர்கள் கப்பல் ஏறிக் கடல் கடந்து சென்று வெளிநாடுகளுடன் வியாபாரஞ் செய்து வந்தார்கள். இந்துமகா சமுத்திரத்தையும் அராபிக் கடலையும் கடந்து மேற்கே ஆபிரிக்காவரையிலும் கிழக்கே சீனம்வரையிலும் சென்று இந்திய வியாபாரிகள் தொழில் நடத்திவந்தார்கள். இந்துமகாசமுத்திரத்திலுள்ள தீவுகளிலும் பசிபிக்மாகாசமுத்திரத்தின் மேற்குப் பகுதியில் உள்ள தீவுகளிலும் இந்து சமய முறைப்படி கட்டிய கோயில்கள் இன்றைக்கும் இருக்கின்றன. இந்தியப் பண்பாட்டின் வேறு சின்னங்களையும் அங்கேயெல்லாம் காணலாம். கடலுக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள அந்தப் பிரதேசங்களுடன் புராதன இந்தியாவின் ஜனங்கள் நீடித்த போக்குவரவுவைத்துக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு மேற்படி கோயில்களும் ஏனைய கலைச் சின்னங்களும் அத்தாட்சியாகும்.

ஏசுநாதர் சகாப்தம்—ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்குப் பிறகுதான் ஐரோப்பாவிற் கொலம்பஸ் என்பவர் பெருங்கடல் கடந்துசெலலும் முயற்சியில் முனைந்தார். அதுவரையிலும் மேனாட்டு மாலுமிகள் எல்லாரும் கரையோரமாகவே கப்பல்களைச் செலுத்தி வந்தார்கள். நடுக்கடலுக்குப் போவதற்கு அவர்கள் அப்போது இன்னும் துணியவில்லை.

ஆனால் கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னால் அதாவது இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தியே, இந்துக்கள் கப்பல்களில் ஏறி மகாசமுத்திரங்களைத் தாண்டிச் சென்றார்கள்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் இந்தியர்கள் அராபிக்கடலைக்கடந்து எகிப்து தேசத்துக்கும் உரோம சாம்ராச்சியத்தைச் சேர்ந்த நாடுகளுக்கும் சென்று வியாபாரம் செய்து வந்தார்கள். இந்த உண்மையை நிரூபிப்பதற்கு இந்தியாவின் இலக்கியத்திலும் இந்தியச் சிற்பங்களிலும் அத்தாட்சிகளைக் காணலாம். கிரீஸ், உரோம தேசங்களின் சரித்திர ஆசிரியர்களும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

சரித்திரம் என்று சொல்வதற்கு எப்போது ஆதாரங் கிடைத்திருக்கிறதோ அந்த நாளில் இருந்து இந்துக்கள் வங்காளக் குடாக் கடலையும் இந்து மகா சமுத்திரத்தையும் கப்பலிற் கடந்து சென்று பசிபிக் சமுத்திரத்தில் உள்ள தீவுகளிற் குடியேறி வந்தார்கள். கிறிஸ்தவ சகாப்தம் ஆரம்பிப்பதற்குமுன்னாலேயே இந்துக்கள் மலாய்நாட்டுக்கும் சீனதேசத்துக்கும் இப்போது இந்தோனேஷியா என்று வழங்கப்படும் ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கும் கப்பல் ஏறிச் சென்றது உண்டு. பாடலிபுரத்தைத் தலைநகராகக்கொண்ட சந்திரகுப்தன் முதலிய மௌரிய வம்சத்து மன்னர்களுக்குக் **கீழ் கடலின் அதிபதி** என்னும் பட்டம் ஒன்று வழங்கிவரலாயிற்று.

ஐந்தாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியன் என்னும் சீன யாத்திரிகர் தாம் இந்தியக் கப்பலிற் கடற் பிரயாணம் செய்ததைப் பற்றி எழுதியிருக்கிறார். ஒரிஸாவிலிருந்து இலங்கைக்கும் இலங்கையிலிருந்து நிக்கோபார் தீவுகளுக்கும் அங்கிருந்து மலாக்காவழியாகச் சீனத்துக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# நாட்டுமக்களின் உரிமை

## பறிபோகாதிருக்க வழிகள்

இலங்கையிலே திறமைமிக்க பொதுவுடைமை நிர்வாகம் நிலவவேண்டுமென்பதைச் சேனநாயகா கட்சி விரும்பினால் இலவசக் கல்வியுடன் சருவக் கூடாது. மந்திரிசபை அறிக்கைகளும் வெளியிட வேண்டியதில்லை. இந்தியா, அமெரிக்க பிரிட்டன் ஆகிய நாடுகளிலுள்ள மூன்று நிபுணர்களைக் கொண்ட ஒரு விசாரணைச் சபையை அமைத்து ஆக வேண்டிய திருத்தங்களைச் செய்வதே முறையென ஸ்ரீ தி. முத்துக்குமாரு பி. ஏ. அவர்கள் எழுதுகின்றார். அவர் மேலுங் குறிப்பிடுவதின் சுருக்கம் வருமாறு: சுதந்திரம் பெற்ற இலங்கையில் இலவசக் கல்வியானது சகல மக்களினதும் சொந்தச் சொத்தாக இருப்பதுடன் அது அவர்களின பிறப்புரிமையாகவும் இருக்கின்றது. இலவசக் கல்வியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பின்வரும் யோசனைகளைத் தெரிவிக்கின்றேன்.

விளையாட்டுகளுக்கெனவும் வாசிகசாலை, நூலநிலையததுக்கெனவும் பிள்ளைகளிடமிருந்து அறவிடும் சம்பளம் முறையைத் தடைசெய்தல்.

கல்விவரியை ஏற்படுத்துவதன் மூலம் பணக்காரர்களிடமிருந்து ரூ. 10,000,000 பெறலாம். இப்படிச் செய்வதன் மூலம் சம்பளங் கொடுக்கத் தாம் தயாராக இருப்பதாகக் கூறும் பணக்காரப் பெற்றோருக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிப்பதாகின்றது.

நகரசபை, பட்டின சங்கம், கிராமச் சங்கம்போன்ற ஸ்தல ஸ்தாபனங்களும் இத்துறையில் முயற்சித்து இலவசக் கல்வியால் ஏற்படும் செலவில் ஒரு பகுதியை உதவவேண்டும். இது சகல மக்களிடத்தும், சமூக ஓர் சேவையில் ஈடுபடவேண்டுமென ஆர்வத்தையும் உண்டாக்குவதாகும்.

தேவையற்ற இடங்களில் அரசாங்கம் மத்திய பாடசாலைகளை நிறுவ வேண்டியதேயில்லை. இப்படிச் செய்வதால் ஆசிரியர்களில்லையே என்ற பஞ்சத்தையும் ஓரளவுக்கு இல்லாமற்செய்துவிடலாம்.

குடிசனத் தொகைக்கேற்பப் பள்ளிக்கூடங்களை மத ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கலாம். பாஷை, சமயம், பொருளாதாரநிலைமை என்பன இது விஷயததிற் கவனிக்கப்படவேண்டும்.

கல்வி பயிற்றுவதற்கான பட்டதாரிகளையும்ஆராயச்சிவல்லுனரையும் நாட்டுக்கு உதவும் பொறுப்பைப் பல்கலைக் கழகமே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

# வெளியில் எதிர்ப்பு

## கூட்டுறவுப் பெண்கள்

10- -49

**ஐக்கிய தேசியக் கட்சியினர் சுதந்திர தினத்தைத் தமக்கோர் விளம்பர விழாவாகக் கருதி, அதில் முயற்சித்தனர் எனப் பலர் பேசிக்கொள்ளுகின்றனர். அரசாங்கம் இதற்கென அள்ளி இறைத்த பணத்துக்கோ அளவு கணக்கில்லை.**

இக்கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் எதிர்க்கட்சியினருந் தங்கள் பிரசாரத்தைத் தங்கு தடையின்றி நடாத்தி வந்தனர். துண்டுப் பிரசுரங்கள், கட்சிப் பத்திரிகைகள், வெளியீடுகள், சொற்பொழிவுகள் என்பன மூலம் இடதுசாரிக் கட்சியினர் சேனநாயகாவின் அரசாங்கத்தைத் தும்புபறக்கக் கண்டித்து வருகின்றனர். அரசாங்கக் கட்சியினர் பிரதிநிதிகள் சபையிலே எதிர்க் கட்சியினருக்கு முட்டுக்கட்டைபோடுவதில் நல்லவெற்றிபெற்றுவருகின்றனர். ஆனால் வெளியிலே எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் போக்குகளைக் கண்டித்து வருவதைக் கேட்டு அவர்கள் ஆறுதலாக இருக்கமாட்டார்கள். அவ்வளவு காரசாரமாக இடதுசாரிகள் யூ. என். பிக்கு எதிராகப் பிரசாரஞ் செய்து வருகின்றனர்.


விவசாயத்தில் ஆர்வம் நிறைந்த பிரதமர் சேனநாயகா, இலங்கையிலுள்ள பெண்மணிகளுக்கு விவசாயப் பள்ளிக்கூடமொன்றைக் குண்டசாலையில் நிறுவி அவர்களுக்குக் கமத்தொழில் பயிற்றி வருகின்றார். அத்துடன் அப் பெண்மணிகள் காற்சட்டை மாட்டிக்கொண்டு நிலத்தைப் பண்படுத்தவும், பால் கறக்கவும் பழகி வருகின்றனர். தையல் வேலையும் பயில்கின்றனராம். இவர்களுக்குச் சமையல் செய்யத் தெரியுமோ என்ற கேள்வி இங்கு இப்போது வேண்டியதில்லை.

நாரீமணிகள் விவசாயப் பண்ணைகளில் நாட்டங்காட்டி வருவதைக் கண்டோ, என்னவோ, பொலிஸ் பகுதித் தலைவரான சேர் றிச்சாட் அலுவிஹாரா என்பவரும் தமது பொலிஸ் படைக்குப் பெண்மணிகளைச் சேர்க்கத் தீர்மானித்திருக்கின்றார். இப் பொலிஸ் சேவைகள் பெண்களுடன் சம்பந்தமான தகராறுகளில் ஈடுபட்டு ஆகவேண்டிய காரியங்களைச் செய்வார்களாம். ஒரு கிராமத்தில் அல்லது ஒரு காரியாலயத்திற் பெண்கள் சண்டை போட்டால் இத்தகைய பெண் பொலிஸார் அவ்விடங்களுக்குச் சென்று அவர்களை அடக்கி வைப்பார்களாக்கும் எனப் பலர் கருதுகின்றனர்.

இது நிற்க, இத்தகைய மாற்றங்களைக் கவனித்துவந்த ஐக்கியசங்கப் பகுதியினரும் சங்க வேலைகளைப் பரிசோதிப்பதற்குப் பெண்மணிகளை அமர்த்த யோசித்திருக்கின்றனர்.

இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதுடன், உணவு,-ஐக்கிய சங்கப்பகுதி மந்திரியும் இதனை ஏற்றுக்கொண்டார். பெண்மணிகள் நடாத்தும் ஐக்கிய சங்கங்கள் மிகுந்துள்ள இடங்களிலேயே இவர்கள் நியமிக்கப்படுவார்கள். இப்போது பெண்மணிகளைக் கொண்ட ஐக்கிய சங்கங்களின் தொகை ஐம்பது எனத் தெரிகின்றது. முஸ்லீம் பெண்மணிகள் அதிகமாக வசிக்கும் பகுதிகளிலும் பெண்களே கூட்டுறவுப் பரிசோதகர்களாக நியமிக்கப்படுவார்கள்.

# கொழும்பு—நிருபர் கடிதம்—



### இரத்தினம் அறிக்கை

இலங்கை அரசினரின் புகையிரதப்பகுதி மிகுந்த நஷ்டத்திலேயே ஓடுகின்றது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து இலாபத்திலே ஓடக் கூடிய வழிவகைகளைக் கூறும்படி அரசாங்கம் ஸ்ரீ டொனல்ட் ஆர். இரத்தினம் என்பவரை நியமித்த விஷயம் வாசகர்கள் அறிந்ததொன்று.

இரத்தினம் அறிக்கையின் முதலாவது பகுதி இவ் வாரம் முற்பகுதியில் வெளியாயிற்று. புகையிரதப் பிரயாணத்தையும் பஸ், லொறிப்போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் ஒழுங்குகள் செய்தால் நஷ்டமின்றிப் புகையிரதப் பகுதியை நடாத்தலாமென்பது ஸ்ரீ இரத்தினம் அவர்களின் யோசனையாகும். லண்டனில் இம்மாதிரியே நடைபெற்றுவருகின்றதென்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அத்துடன் புகையிரதப் பகுதியில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் வற்புறுத்தியுள்ளார். இப்படிப் பல நல்ல யோசனைகளைக் கூறும் ஸ்ரீ. இரத்தினம் அவர்கள் புகைவண்டிகள் வேகமாக ஓடவேண்டுமென்பதையுங் குறிப்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ண பரம்பரை

"கொண்டோடி"

- இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து ஒரு வருஷமாகின்றதாம்.
- இந்தச் சுதந்திரம் கிடைத்த ஒருவருஷத்துக்குள் எத்தனையோ சம்பவங்கள் நடந்துவிட்டனவாம்.
- பல ஊர்களிலும் சிங்கக் கொடிகள் பறந்தனவாம்.
- திருகோணமலையில் ஒரேயொரு சிங்கக் கொடிதான் பறந்ததாம்.
- அதுவும் மின்சார நிலையத்தின்மீதுதான் பறந்ததாம்.
- பறந்தபொழுது மின்சார விளக்குகள் பகட்டாய் எரிந்தனவாம்.
- மின்சார விசிறிகளும் பரபரப்பாய்ச் சுழன்றனவாம்.
- பரபரப்பாய்ப் பொலிஸாரும் திரிகின்றனராம்.
- அநாமதேயக் கடிதங்களும் குவியலாக வந்து குவிகின்றனவாம்.
- குதிரைப்பந்தய சங்கத்துக்குரிய 4 லட்சம் ரூபாய்க் குவியலைக் கொள்ளையடித்ததனுல்தானும்.
- இக்கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தலைமைவகித்தவர் பெரிய புள்ளியாம்.
- யாழ்ப்பாணப் பொலிசாரும் சிரத்தையுடன் தான் வேலை பார்க்கிறார்களாம்.
- ஸி. எல். நம்பருடன் ஒரு கார் யாழ்ப்பாணத்தில் ஓடியதாம்.
- அதில் நாலு பேர்வழிகள் இருந்தார்களாம்.
- இவர்கள் தென்மாகாணத்தைச் சேர்ந்தவர்களாம்.
- இவர்களுக்கும் கொள்ளைக்கும் சம்பந்தமில்லையாம்.
- யாழ்ப்பாணம் பொலிஸார் இக்காரைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.
- இது உத்தியோக பூர்வமாகச் சொல்லப்பட்டதாம்.
- யாழ்ப்பாணத்திலிருந்து விமானத் தபாற் போக்குவரத்தையும் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்களாம்.
- போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. இக்னேஷியஸ் பெரெரா இதைஆரம்பித்து வைத்தாராம்.
- இதில் சில தபால் நிலைய உத்தியோகத்தர் பங்குபற்றவில்லையாம்.
- அவருக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றார்களாம்.
- மாலையொடு விமானத்தபாற் பையைத் திறந்தாராம்.
- பிரதம மந்திரியிடமிருந்து வாழ்த்துச் செய்தியொன்று மிருந்ததாம்.
- யாழ்ப்பாணம் நகரமேயருக்குத் தான் அச்செய்தியாம்.
- இன்னும் ஒரு செய்தி அமெரிக்காவிலிருந்து வந்திருக்கின்றதாம்.
- விமானத் தபால் மூலம் இது யாழ்ப்பாணத்திற்கு வரவில்லையாம்.
- இந்திய அதிகாரிகளின் மனைவிகளின் சேலைகளை அமெரிக்கப் பெண்மணிகள் பார்த்தார்களாம்.
- அமெரிக்கப் பெண்மணிகளும் இப்பொழுது சேலையணியத் தொடங்கிவிட்டார்களாம்.
- அமெரிக்கரிடையே, இந்த இந்திய உடை அலங்காரம் பெரும் மகிழ்ச்சியை அளித்ததாம்.
- இது தற்கால நாகரிகமாய் விட்டதாம்.
- தற்காலத்தில் நாகரிகம் முற்றி வளர்ந்து விட்டதாம்.
- செக்குத் தெருவில் தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை என்றொருவர் இருந்தாராம்.
- கன்னியாஸ்திரி மடம் ஒன்றிற்குள் நுழைந்தாராம்.
- ஒரு மாணவி ஒருத்தியைப் பார்த்துக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினாராம்.
- வழக்கும் தொடரப்பட்டதாம்.
- தீர்ப்பில், நீதிபதி ஆறுமாத சிறை விதித்தாராம்.
- தீர்ப்புச் செய்யப்பட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறினவாம்.
- கும்பனித் தெருப்பகுதியிலுள்ள மதுக்கடைகளை மூடிவிட வேண்டுமாம்.
- இத்தீர்ப்பு அகில இலங்கை வாலிபர் காங்கிரஸின் ஆலோசனைக் கூட்டமொன்றில் நிறைவேறியதாம்.
- ஆலோசனையும் பரிசோதனையும் ஒன்றுதானும்.
- வானொலியிற் பாடும் பாடகர்களின் குரலைப் பரிசோதித்து அனுப்புவதே இதுகாலவரையில் நடந்தமுறையாம்.
- சுதந்திர தினத்தன்று ஒரு பாடகர் பரிசோதிக்கப்படாமலேயே பாடிவிட்டாராம்.
- இந்தப் பரிசோதனை எவ்வளவு பரிசுத்தமாக நடைபெறுகின்றதென்று அயலூரார் சொல்கிறார்களாம்.
- இதை நம்மூரிற் கேட்பதற்கு ஒருவருமில்லையாம்.


## பூகோளத்தொடர்
## பூமிசாஸ்திரம்
### நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

★

பலகாலம் ஆசிரியராயிருந்து அனுபவம்பெற்ற திரு. வே. மு. சபாரத்தினசிங்கம், B. A., அவர்களால் 4-ம், 5-ம் வகுப்புகளுக்கென, பாடத்திட்டத்துக்கமையச் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன.

4-ம் புத்தகம் — சதம் 80
5-ம் புத்தகம் — ரூ. 1-00
தபாற் செலவு வேறு

★

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை

(3577)



சிறந்தபலனுக்கு

## C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

## C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
**Colombo Commercial Company**
LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நடை

...மு. கோவிந்தசாமி....

> தென்னிந்தியாவை அகத்தே கொண்டு எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கும் உகந்ததெனக் கருதுகின்றோம். —பr.

நாட்டிற்கு உரிமை வருகிறதாம். இனி மொழி வளருமல்லவா? தமிழ்ப் பேச்சு நடை எழுத்துநடை பற்றி எழுதவேண்டிய கடமை வந்துவிட்டது. மக்கள் பேச்சானது அறிந்தோர் தெரிந்தோரது எழுத்து நடையை யொட்டியே அமைகின்றது. மொழியைத் தனிப்பாடமாகப்படித்தவன் இன்னும் தமிழை ஆராய்பவன் என்ற உரிமையில் என்னுடைய் கருத்துக்கள் வெளியாகின்றன.

இதுவரை அடிமை நாடு. மொழி (கல்வி) யறிவில்லாத பெரும்பாண்மையோர் நாடு. தமிழ் நடையைப்பற்றி யாராரோ, நினைத்ததெல்லாம் கூறினர். தமிழுணர்ச்சியற்றவன், தமிழ்ச்சுவை யறிந்த பிறமொழி மோகத்தில் மயங்கியவன் எல்லாம் தன்கையிலிருப்பதாக எண்ணிய அரசியற் கட்சியைச் சேர்ந்தவன் அனைவரும் கூறினர். சோற்றைப் பற்றியே கவலை கொண்ட மக்கள், மொழியறிவில்லாத மக்கள் சொன்னதையெல்லாங் கேட்டனர். உரிமை வந்தபிறகும் அங்நிலை உதவுமா? நாகரீகத்தை நினைக்கிறோம்; மொழியை நினைக்கிறோம்; மொழிவாரி நாட்டைப் பிரிக்கிறோம். இப்போது உண்மையான தமிழ் நடை என்ன என அறியத்தானே வேண்டும்?

## எல்லோருக்கும் உரிமை

ஒரு பொருளைப் பற்றிக் கருத்துரைப்பது வேறு. முடிவுகட்டிச் செயல் முறைக்குக் கொண்டுவருவது வேறு. எல்லோருக்கும் கருத்தை யுரைக்கும் உரிமையுண்டு. முடிவுகட்டும் உரிமை அந்தத் துறையில் தேர்ந்த அறிஞர்க்கே யுண்டு. அடிமை நாட்டில் ஆங்கில அறிவு கற்ற நம்மிடம் ஒரு நன்மையும் ஒரு தீமையும் தோன்றின. உரிமைக்குப் போராடவும் கருத்தை யார்க்கும் அஞ்சாமல் வெளியிடுவதுமான துணிவு கொள்ளவும் நேர்ந்தது நன்மை; ஒரு துறையிற் பெற்ற அறிவாற் செருக்கி எல்லாத்துறையிலும் முடிவுகட்டிச் செயலாற்றவுந் தொடங்கும் வறட்டுத் துணிவே தீமை. அரசியலில், ஆராய்ச்சிக்குழு அமைக்கிறார்களே! சரித்திரத்துறைக்கென்றால் சரித்திரப் பேராசிரியர்கள், அதில் நல்ல அறிஞர்கள் இவரையே அந்த குழுவில் அமைக்கிறார்கள். பொருளாதாரப் பேராசிரியனையோ, அறிஞனையோ அதில் அமைப்பதில்லை. அப்படித்தான் பொருளாதாரத்திற்கும். உலகில், எதற்கும் இப்படித்தான்.

சென்னை துணி 'மில்' கொள்கை வெளியானபோது எல்லோரும் அதைப்பற்றி எடுத்துரைத்தனர். ஆனால் முதலமைச்சர், பொருளாதார அறிஞர்கள் 'மில்'லை நடத்தும் பழகிய அறிவுடையவர்கள் என்ன கூறுகின்றனர் எனத்தான் உற்றுப் பார்க்கிறார். அமைச்சர் திட்டமும் காந்திஜி திட்டமும், அகர்பால் போன்ற பெரிய பொருளாதார ஆசிரியரால் போற்றப்பட்டதேயாம். நான் மொழியில் தேர்ந்த அறிஞன் என்பதனால் எனக்கு அத்தகைய குழுவில் இடங் கேட்பதா? கொடுத்தாலும் போவேனா? ஆனால் மொழியில் மட்டும் யாரும் எதுவும் கூறுகின்றனர்; முடிவுகட்டி நடத்துகின்றனர். நாமும் பின்பற்றுகிறோம். அரசியலில் அறிந்தவன்; ஆங்கில அறிஞன் என்பதற்காக அவனைத்தமிழிலும் சிறந்தவனாக ஏற்க முடியுமா? தமிழிலும் தன்னை மெய்யறிஞனாகக் கருதுவது முறையா? இன்னொரு வியப்பு, மொழியறிஞர் கூறுவது மூடத்தனம் எனவும் புறக்கணிக்கிறோம்! முற்காலத்தே அரங்கேற்றம் இருந்தது. இக்காலத்தே உரிமைநாடுகளில் அரசாங்கக் 'கட்டுப்பாடுகள்' உண்டு. இந்த அடிமைநாட்டில் ஒன்றுமில்லை. தான் நினைப்பதெல்லாம் நடையாம். செய்தித்தாள் பாவினாலும் பரவிற்று. மனம்போனபடி எழுதுகிறான்; பதிப்பித்துத் தள்ளுகிறான். யாருக்கும் நாலுபேர் இருப்பார்களே! புகழ்வதற்கு! தலைகால் தெரியவில்லை. மொழிநூலை ஆராயும் சிறந்த அறிஞர்களையெல்லாங் கேட்டேன். அவர்கள் கூறுவதற்கு முற்றும் முரணாயிருப்பதனாற்றான் இவ்வளவும் சொல்லுகிறேன்.

எது தமிழ் எது தமிழ் நடை? மக்கள் பேசுவதே தமிழ்! அதுவே நடை. அவர்கள் நான் பேசியபோது கைதட்டினார்கள். ஆகவே நான் எழுதுவதே நடை. மக்கள் குழந்தைகள் மாதிரி: அறிந்தோரும் தெரிந்தோரும் சொல்லுகிறபடியெல்லாம் ஆடுபவர்கள். அதுவும் அடிமை நாட்டில் எழுத்தறிவற்றவர்தானே! பாணிக்கிரஹண சுபமுகூர்த்தம்' எனப்பதிப்பித்தபோதும் ஏற்றுக்கொண்டார்கள். இன்று 'திருமண அழைப்பிதழ்' என்றாலும் ஏற்கின்றனர். இராவணனா, இராமனா யார் ஆண்டாலென்ன என்று பேசினாலும் கைதட்டினர்; ஆங்கிலேயன், நாங்கள் ரயில், தபால், ஏற்படுத்தினோம். ஒற்றுமைப் படுத்தினோம் என்றானே அப்போதும் கைதட்டினர்; நேரு இந்தியாவை வேற்றவர் ஆளவிடோம், நமக்கு யாவருக்கும் சோறும் உடையும் வீடுந் தேவை என்றாலும் கைதட்டுகின்றனர். 150 ஆண்டு அடிமையைப் பொறுத்திருந்தவர்கள்! கள் குடித்துக்கொண்டிருந்தவர்கள்! முதலாளியிடம் மண்டியிட்டுக் கிடந்தவர்கள்! மக்கள் விரும்பிய வாழ்க்கையென அடிமையை ஏற்கிறோமா, கள்ளை ஒழிக்காமல் இருக்கிறோமா, பொதுவுடைமையை நிறுத்தி வைக்கிறோமா? இவை எளிலெல்லாம் அவர்களைத் திருத்தவேண்டும்; மொழியில் மட்டும் இருப்பதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமோ? அமெரிக்காவின் மாதொருத்தி **இந்தியத் தாய்** (Mother India) என்ற நூலையும் யாரோ ஒருவன **இந்தியாவின்மேல்தீர்ப்பு** (Verdict on India) என்ற நூலையும் எழுதியபோது எவ்வளவு எதிர்த்தோம்; வெறுத்தோம். அடிமை மக்களை, அறிவில்லாத மக்களை, அவர்களுடைய வாழ்வை வைத்து மதிப்பிட்டது மடத்தனம் எனவெல்லாம் கண்டித்தோமல்லவா? மொழிக்கு மட்டும் அவர்களை வைத்து முடிவுகட்டுவதில் என்ன முறையுண்டு? நெறியுண்டு?

காரணம், நமக்கே மொழியிற போதிய அறிவில்லை. பிறமொழி யறிவே மிகுதி. நாட்டுப் பற்றுடையோனாகக் காட்டிக்கொள்ள வேண்டும். கேட்டது, ஆறுவதுவரை படித்து பேசுவது, இவற்றையே வைத்துக் கொண்டு; அதற்கோர் கொள்கை வகுத்துக்கொண்டு; அதற்கோர் கூட்டம் கூடிக் கொண்டு; தன்கையில் ஒரு செய்தித்தாளை வைத்துக் கொண்டு நடக்கிறோம். அதன் பெயர் மக்கள் மொழி. திண்டாட்டமும் எதிர்ப்பும் தோல்வியும் கிட்டும்போது மேலை நாட்டு அரசாங்கங்கள் 'இது உள்நாட்டுத்தகராறு. மற்றோர் குறுக்கிடவேண்டாம்' என்பர். அதுபோல இவர்கள் அறிந்த அரைகுறை மொழியறிவை வைத்துக் கொண்டு 'இதுவே மக்கள் தமிழ்' என்கின்றனர். நான் சொல்கிறேன், மக்கள் தமிழ்ப் பேசுவோர் தமிழினும் ஆங்கில அறிவு மிகுதியுடையவர்; வடமொழியறிவும் பற்றும் மிகுதியுடையவர். இது நானே கண்டது.

சகல பாடத்தையும் தமிழிற் கற்பிக்கவேண்டும் என்று கூறியபோதும், தமிழிசை தமிழ் மக்கட்கு வேண்டும் என்றபோதும் எதிர்த்தோருடைய உணர்ச்சியே இங்கும் அடிப்படையாக உள்ளது. மொழியுணர்ச்சியில்லாமையும், இருப்பதைக் கொண்டே தலைமை தாங்கவேண்டுமென்ற வினைசையும், நாட்டுநலனை கருதி விட்டுக்கொடுக்கவும், சிறிது முயற்சித்து மேலறிவு பெற முடியாத சோம்பலுமே இதற்கெல்லாம் காரணம். இரண்டு ஆண்டுத் திட்டத்தில் நல்ல தமிழ் நடையை மக்கள் புரிந்துகொள்ளச் செய்ய முடியும். திருக்குறளைச் சொன்னவுடனே கருத்தைப் புரிந்துகொள்ளுமளவில் ஐந்தாண்டுகளில் முன்னேற்றக் கூடும். எல்லோருக்கும் பரவும் செய்தித்தாளும், அரசும் ஒத்துழைக்க வேண்டும். ஐந்தாண்டில் அணுவைக் கண்டு பிடிப்பேன், 'கொஸ்மிக்' கதிரை (Cosmic Ray)க் காண்பேன் என்கிறான் மனிதன். நல்ல நடையைப் பழக்குதலா ஒரு பெரிய வேலை! மனம் மாற வேண்டும்; அவ்வளவுதான்!

தமிழ் வரி வடிவில் இருப்பது தமிழென நினைக்கிறோம். 'உவட் இஸ் யுஅர் நேம்' (What is your name) இது தமிழா. சொற்கள் தமிழாக; தமிழ்ச் சொல்தான் எனத் தமிழறிஞர் ஒப்புவதாக மற்ற மொழியறிஞர் 'ஆம்' என விட்டுக் கொடுப்பதாக இருக்கவேண்டாமா? பாணிக்கிரஹண சுபமுகூர்த்தத்தை வடமொழிப் பண்டிதர் இவை தமிழ்ச் சொற்களென விடவும் மாட்டார்; தமிழறிஞர் கூறவும் மாட்டார். இன்றைக்கு 'ஹெல்த்' (Health) ரொம்ப 'பாட்' (bad) சார். இவற்றை ஆங்கிலேயர் விடுவாரா? இவையே மக்கள் பேசுவது இவை தமிழா? இந்த[illegible] இஃதோர் கட்சி! கணக்கில்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## கலாயோகி

# ஆனந்த குமாரசுவாமி

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

(31-1-49 ன் தொடர்ச்சி)

பயிரியலின் பழுதறுநூல் பலபயின்று பெரும்புலமை
படைத்தோ னாகி [illegible]
மயரறுசீர் வளர்க்குமெழிற் பல்கலையின் மணிக்கழக
மாணி யாகி
அயர்வறுபே ராய்வினதின் ஆன்றமுது பெரும்புலவ
னாகி யான்றோர்
உயர்வுதர வுணர்ச்சிநல னுதவிதர வியாழனென
வொளிரும் பார்பன் 13

புகலுமுயர் செழுந்துறக்க பூமியெனும் அமெரிக்கா
போந்தா னேனும்
அகலவிளங்கிடுபிரெஞ்சுபெல்ஜியமொல்லாந்து தென்மார்க்
கழகின் ஜர்மன்
மிகலுறுநற் பாரதம்ஜப் பான்சீனம் பாலியொடு
விளங்கும் ஜாவா
இகலறுமாண் புறுபர்மா ஈழமுதற் பலநாட்டுக்
கியைந்து சென்றோன்; 14

ஆங்கிலம்போ லழகொழுகப் பிரெஞ்சுமொழி கிரேக்கமொழி
யணியார் லத்தீன்
பாங்குறுசீர் பொலிஜர்மன் சமஸ்கிருதம் பாலிஇந்தி
பரக்கக் கற்றோன்
தீங்கறுதண் டமிழ்பார்சி சிங்களமைஸ் லாந்துமொழி
திகழொல் லாந்து
வீங்குமிஸ்பா னியமொழியா தியனநனி விளக்கிடுமா
விழைந்து கற்றோன்; 15

தந்தைசென்ற வழியேபோய்ச் சான்றாண்மை மேற்கொண்டு
தக்கோ ராவார்
சிந்தையுற மேனாட்டு மொழிபலவி ஜப்பானிற்
சீனந் தன்னில்
நிந்தையற விசுலாமி விந்தியத்தின் வடமொழியில்
நிகழ்த்து நூல்கள்
விந்தையுறப் பயின்றுதிரு வாசகமாந் தமிழ்நூலும்
விரும்பி யாய்ந்தோன் 16

மன்னுமிறை யுயிர்மாட்சி வாய்ந்திடுதத் துவப்பெருஞ்சீர்
வளர்விஞ் ஞானம்
துன்னுபல மொழியாய்வு துதையழகின் கலைத்துறைகள்
தொண்டின் செம்மை
என்னுமிவை முதலாகப் பலதுறையி லீடுபட்டிங்
கெவரும் போற்றி
நன்னர்வளர் கலையோகி யெனவிளம்ப நனியிலங்கும்
ஞானி யாவான் 17

(தொடரும்)

# கவிஞரின் சேவை

## தமிழ் மக்கள் பண்பாடு

நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை அவர்களின் மணிவிழாவைமுன்னிட்டு இம்மாதம் 5-ந் திகதி கோவையில் அன்னாருக்கு ரூபா 10,000 பண முடிப்பு தமிழ் மக்கள் சார்பில் வழங்கப்பட்டது. இவ் வைபவத்துக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீ ஆர். கே. சண்முகஞ் செட்டியார் கவிஞரின் இலக்கியப் பணியைப் பாராட்டிப் பேசியதாவது:

தமிழ்நாடு எப்பொழுதுமே பண்பாடு அடைந்த நாடு. பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே இப் பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. சிலருடைய அபிப்பிராயப்படி தமிழ்மொழிதான் முதல் மொழியாகக்கூட இருக்கலாம். அது எப்படி இருந்தபோதிலும் தமிழ்நாடு முதலிற் பண்பாட்டைப் பெற்றிருந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. தமிழ்நாட்டிற் கவிஞர்களை எப்பொழுதும் அரசாங்கம் முதற் சாதாரண மக்கள் ஈறாக எல்லோரும் போற்றியே வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மன்னர்களின் ஓர் முக்கியமான கடமை கவிஞர்களைப் போற்றி அவர்களுக்கு உதவியாக இருத்தலே ஆகும். தூதுகோஷ்டிக்குப் புலவர்களையும் கவிஞர்களையுந்தான் மன்னர்கள் அனுப்பி வந்தார்கள். அரசர்கள் தவறு செய்தால் மேற்படி தவறுகளை எடுத்து மன்னர்களுக்குக் கூறும் உரிமையைக் கவிஞர்களே பெற்றிருந்தார்கள். மந்திரிகள் இத் தைரியத்தைப் பெற்றிருக்கவில்லை. தமிழ்நாட்டிலே கவிஞர்கள் என்றுமே கௌரவிக்கப்பட்டு வந்துள்ளார்கள். அம்முறையில் நாமக்கல் ஸ்ரீ இராமலிங்கம்பிள்ளைக்கு அவருடைய கவிகளைப் பாராட்டிப் பண முடிப்புக் கொடுப்பது பொருத்தமேயாகும். கவிகள் உயிரோடிருக்கையில் நன்றாகப் போற்றப்படுவதில்லை. தமிழ்நாட்டுக் கவி ஸ்ரீ பாரதியார் உயிரோடிருக்கையில் மக்கள் போற்றவில்லை. அன்றாட வாழ்க்கையை நடத்துவதே கஷ்டமாயிருந்தது. பாரதியார் இறந்தபின் அவரை நாம் போற்றினோம்; கம்பரின் பெருமையைப்பற்றிப் பேசுகிறோம். விழா கொண்டாடுகிறோம்; ஆனால் அவருடைய பாடல்களைப் படித்தவர்கள் வெகு

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் ஆசியாவும்

'சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று தனது அமுத கீதத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்குமிடையே ஒற்றுமைப் பாலத்தைத் தன் கற்பனைக் கண் கொண்டு கண்டுகளித்தார் அமரகவி பாரதியார். இன்று அவர் இருந்தால் சுதந்திர இலங்கையைக் கண்டு உள்ளம் பூரித்திருப்பார் என்பதற்கையமில்லை. அவருடைய காலத்தில் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுமே அடிமையுற்றிருந்தன. இன்று இரண்டு நாடுகளும் சுதந்திரம் பெற்றுள்ளன. இந்தியா இலங்கை ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து ஆசியாவின் அரணைப் பலப்படுத்தப் பாடுபட்டாற்றான், உலகின் சுதந்திரத்தை நிலைநாட்ட முடியும். இது அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை. இலங்கையிலே இயற்கைத் துறைமுகங்கள் உண்டு கப்பற்படை தங்குவதற்குச் சகல வசதிகளுமுள்ள கப்பல் தலங்களும உண்டு. போருக்கஞ்சா வீரம் மிகுந்த மக்களுமுளர்.

## முத்தாரம்

'இலங்கைத்தீவு இந்தியாவின் மார்பில் முத்தாரம் போல் இருக்கின்றது. பாரதத் தாய் அதனைத் தன் வீர மார்பில் அலங்கரித்துக்கொண்டிருக்கிறாள்.' இவ்வாறு இந்தியாவின் பிதாவும் அஹிம்ஸா மூர்த்தியுமான மகாத்மா காந்தி சில வருடங்களுக்கு முன்னர் கூறினார். இவ்வளவு மகத்துவம் வாய்ந்த இலங்கை, கைப் பிள்ளையாக இருப்பது கண்டு வருந்தாமல் இருக்க முடியாது. இந்தியாவும் இலங்கையும் தாயும் சேயும் போன்ற நாடுகள்.

தன் மகள் சீரும், சிறப்புடன் வாழ வேண்டும் என்றல்லவா தாய் இலட்சியக் கனவுகள் காண்பாள். அப்படியிருக்க இலங்கையிலுள்ள சிலர், இந்தியா இலங்கையை விழுங்கிவிடும் என்று சொல்வது அழகாகமாட்டாதே! இந்தியாவும் இலங்கையை விழுங்கமுடியாது, இலங்கையும் இந்தியாவை விழுங்க முடியாது. ஏனெனில் ஆசிய மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உண்மை வேரூன்றி வருகின்றது.

## இலங்கைத் தலைவர்கள்

பெருமை மிக்க தலைவர்களுள் ஸ்ரீ மகாதேவா அவர்களும் ஒருவர். இலங்கைத் தமிழர்கள் மீது பிறருக்குச் சந்தேகம் தோன்றி அவர்கள் வசைமாரி பொழிந்தால் அவரும் வசைமாரி பொழிவதில்லை. அதற்குப் பதிலாக அவர் சம்பந்தப்பட்டவர்களிடம நெருங்கிச் சந்தேகங்களையும் போக்க அரும்பாடுபடுபவர் என்பதை தமிழரும் சிங்களரும் அறிவார்கள்.

காலம் சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சுபிட்சத்துக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். ஓர் சமயம் சிங்கள மக்கள் சொல்லொணாத் துன்பம் அனுபவித்த போது சேர் இராமநாதன் வெள்ளையர்களுடன் வாதாடிப் பல்லாயிரம் உள்ளங்களைப் பயத்தினின்றும் நீக்கி வைத்தார். அத் தியாக சீலனை இலங்கை மக்களும் இலங்கை அரசாங்கமும் பிரதமர் சேனநாயகாவும் மறந்திருக்கமாட்டார்கள். இவர் இலங்கையின் சரித்திர ஏடுகளில் பொன் எழுத்துக்களிற் பொறிக்கப்படவேண்டிய உத்தமர் ஆவர்.

பிரதமர் சேனநாயகா இலங்கைக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். தன்னை ஓர் விவசாயி என்று சொல்லிக்கொள்வதில் அவர் பெருமை யடைகின்றார். ஆனால் யார் செய்த பாபமோ அவருக்கே தெரியாமல் இந்தியர் என்றால் பகைவர் என்ற எண்ணம் அவருக்கு ஏற்படுகின்றது. இந்தியா எவருக்கும் விரோதியல்ல. இந்தியாவை விரோதிப்பவர்கள் மீதும் அந்நாடு அன்பு பாராட்டிவருகின்றது. அவ்வாறே இலங்கையின் சுதந்திர ஆண்டு பூர்த்தியின் போது இலங்கை இந்தியாவுடன் நேசமாக இருக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பது சாலவும் பொருத்தமானது.

## ஒன்று கூடுவோம்.

நடந்ததை மறப்போம். நடக்கப்போவதைப் பற்றிச் சிந்தனை செய்வோம். இந்த அணுக்குண்டுச் சகாப்தத்திலே தனித்தனி ஒதுங்கி நிற்கமுடியாது என்பதைச் சரித்திரம் காட்டிவருகின்றது. மேற்றிசை நாட்டினர் என்று சொல்லிக்கொள்ளும் ஏகாதிபத்திய வீரர்கள் ஆசியா என்றால் ஏதோ கிள்ளுக்கீரை என நினைத்துவந்தார்கள். அந்தக் காலம் மலையேறிவிட்டது. இனி ஆசிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஆசியாவைப் பலப்படுத்துவதில் முனைய வேண்டும இதைச் செய்வதில் இலங்கையும் இலங்கை மக்களும் ஒத்துழைக்க வேண்டும். வாழ்க இலங்கை!

**திருச்சி—என். ஆர். வி.**

ஆசிரியர்க்குக் கடிதம்

## அதிகார் அபிப்பிராயம்

சென்ற 4-2-49 வெள்ளிக்கிழமை நீர்வேலியிற் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. அக் கூட்டத்தில் அதிகார் ஏ. நாகநாதர் தலைமை வகித்துப் பேசும் போது இலங்கை இந்தியர்களைப்பற்றியும் பேசினார். இவரது பேச்சு எல்லோருக்கும் மன வருத்தத்தைக் கொடுக்கிறது.

குறித்த சுதந்திரதினக்கொண்டாட்டத்தைஏற்பாடுசெய்தவர் வலிகிழக்கு காரியாதிகாரியாகும். இவர் போன்றோர் பலர் ஸ்ரீ பொன்னம்பலத்துக்கு முடிசூட்டவேண்டும் என்னும்வாஞ்சையுடையவர்கள். இந்தியர் மசோதாவுக்கு ஸ்ரீ பொன்னம்பலம் சாதகமாய் இருந்தமையால் அவருடைய கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்காக திரு. நாகநாதரைப் பிடித்துக்கொண்டார்கள் போலும். ஸ்ரீ பொன்னம்பலத்துக்கு ஆள்கூட்ட முயற்சித்த இவர்கள் சுதந்திரதினத்திற் சிங்கக்கொடி ஏற்றுததும் விந்தையே. இந்தியா மசோதாவுக்குப் பாதகமாகக் கோப்பாயப் பிரதிநிதி வாக்களித்தமையால் (ஸ்ரீ பொன்னம்பலத்துக்கு எதிராக) அவரையும்எதிர்த்துத் தூற்றத்தொடங்கிவிட்டனர் இக்கட்சியினர், திரு.வன்னியசிங்கத்தின் வெற்றிக்காக தேர்தலில் அல்லும்பகலும் உழைத்தோர், திரு.வன்னியசிங்கத்துக்கு எதிரான கட்சியைச் சேர்ப்பது ஒரு அதிசயந்தான். சென்ற மாதத்தில் நீர்வேலியில் கூட்டுவதாக இருந்த ஒரு சமூகசேவை மகாநாட்டைத் திரு. வன்னியசிங்கம், திரு. செல்வநாயகம் முதலியோர் வரவிருந்தமையால் ஒரு சிலரைப் பிடித்து இந்த எதிர்க்கட்சியினர் மகாநாட்டை நடவாமலே குழப்பிவிட்டார்கள்.

திரு. ஏ. நாகநாதரது அபிப்பிராயம் நீர்வேலிக் கிராமத்துக்குப் பெரிய அவமானமாக இருக்கிறது. இந்த அபிப்பிராயம் இக்கட்சியினரின் விருப்பத்திற் கிணங்கவே திரு. நாகநாதரால் கூறப்பட்டது என்றுகொள்ளலாம். கூட்டத்துக்குத்தலைமைவகிக்கக் கூடிய பல அறிஞர்கள் இருந்தும் ஒரு வயோதிபரை அழைத்ததற்கு வேறு காரணம் இருக்கமுடியாது.

சி. க. வேலாயுதபிள்ளை
நீர்வேலி, 8-2-49

# வண்ணாத்திப் பூச்சி

## அதன் விசித்திர வாழ்க்கை

சிவனொளிபாத மலையின் அடிவாரத்தில் மாலைவேளைகளைக் கழிக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. அந்த நாட்களில், வகைவகையான வண்ணாத்திப் பூச்சிகள் மலையுச்சியை நோக்கிப் பறந்து செல்வதைக் கவனித்தேன். (அவை ஸ்ரீ பாததரிசனத்திற்காகப் பறந்து செல்வதாகவும், அதனாலேயே ஸ்ரீபாதமலைக்கு 'சமனலக்கந்த' என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் சிங்கள அன்பர்கள் கருதுகிறார்கள்.) அவ் வண்ணாத்திப் பூச்சிகள்தான் எத்தனைவகை? அவற்றில் எத்தனை வர்ணஜாலங்கள்? சில புத்தபிக்குகளைப் போன்று மஞ்சட் போர்வை போர்த்தியவை. மற்றும் சில அங்கே யாத்திரைக்காக வரும் நவநாகரீக நாரீமணிகளின் பட்டாடைகள் போன்ற விசித்திர வர்ணங்களுடையவை. அவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பதே பரமானந்தத்தை உண்டாக்கிற்று. அவ்வானந்தத்திடையே வண்ணாத்திப் பூச்சிகளைப்பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

உலகில் முதல்முதலாக எப்பொழுது பூ மலர்ந்ததோ, அந்தக்காலந்தொட்டு வண்ணாத்திப் பூச்சிகளும் வாழ்ந்து வருகின்றன. அவ்விதமாக முதற்பூ மலர்ந்தது இற்றைக்கு 40,000,000 ஆண்டுகளின் முன்னர் என விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கின்றார்கள். பழமையான இவ் வண்ணாத்திப்பூச்சி இனத்திலே இப்பொழுது இருபதினாயிரம் வகை உலகிலிருக்கின்றன. அவற்றில் முன்னூறு விதங்கள் ஐரோப்பாக் கண்டத்திலும், அறுபத்திரண்டுவகை இங்கிலாந்திலும உள்ளன. மற்றைப் பகுதிகளிலும் பார்க்க அமேஸன் நதிப்பிரதேசத்தில் ஏராளமான வகைகள் காணப்படுகின்றன. வடதுருவப் பிரதேசம், ஈக்குவடார் மலையின் 16,500 அடி உயரமுள்ள சிகரம் ஆகிய இடங்களில்கூட வண்ணாத்திப்பூச்சிகள் வசிக்கின்றன.

சொலமன் தீவுகளில் ஒரு வித வண்ணாத்திப்பூச்சியுண்டு. அது ஒவ்வொன்றும் ஒரு அடி அகலமிருக்கும். பறவைகளைச் சுட்டு வீழ்த்துவது போன்று இவற்றையும் வேட்டையாடுகிறார்கள். அந்நாட்டுப் பெண்கள் இவ் வண்ணாத்திப் பூச்சிகளைத் தங்களுக்குத் தொப்பிகளாக அணிகிறார்கள்.

தீவுகளில் அதிகவித வண்ணாத்திப் பூச்சிகள் வசிப்பதில்லை. ஒரு கண்டத்திலிருந்து தீவு அதிக தூரத்திலிருந்தால், அத்தீவில் வண்ணாத்திப்பூச்சிகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

வண்ணாத்திப்பூச்சிகள் வேகமாகப் பறக்கக்கூடியவை அல்ல. அவற்றின் வேகம் மணித்தியாலம் ஒன்றிற்கு ஐந்து மைலாகும். அப்படியிருந்தும் அவை தத்திப் பறக்கும சாமர்த்தியமுடையவை. எனவே பறவைகளால் இலகுவில் அவற்றை உணவிற்காகப் பிடிக்கமுடியாது.

வண்ணாத்திப் பூச்சியின் வாழ்க்கை அதி விசித்திரமானது. முதலில் முட்டையினின்றும் புறப்பட்டுக் கம்பளிப் புழுவாகின்றது. புறப்பட்டவுடன் அது செய்யும் முதல்வேலை தான் புறப்பட்ட முட்டையின் ஓட்டையே சாப்பிட்டுவிடுவதுதான். அம் முதலாகாரம் அதற்கு நன்மையே செய்கின்றது. அதைச் சாப்பிடவிடாது தடுத்தால் அப் புழுவே இறந்துவிடுகின்றது. அதன் பின்னர் அது முழுத் தாவர போசனியே. இந் நியதிக்கு விதிவிலக்கான ஒருவகை நீல நிற வண்ணாத்திப்பூச்சியிருக்கின்றது. இந்த இனக் கம்பளிப்புழு எறும்புகள் வசிக்கும் கூட்டிலே புழுவாக மாறுகின்றது. அங்கே எறும்புகளிக்குப் பரிந்து பாலூட்டுப் [illegible] கள் உறிஞ்சும்படி கொடுக்கின்றது. அந் நன்றிக்கு எறும்புகள் செய்யும கைம்மாறு தங்கள் சிறு எறும்புகளையே உணவாகக் கொடுத்துவிடுவதுதான்.

கம்பளிப்புழு, கூண்டுப்புழுவாகிப் பின் வண்ணாத்திப் பூச்சியாக மாறுவது இயற்கையில் நிகழும் பல அதிசயங்களில் ஒன்று. முதலிற் கம்பளிப்புழு சிறுகச் சிறுகத் தேய்ந்து உருவமில்லாத உயிரணுக்களின் குழுவாக மாறுகின்றது. இவ்வுயிரணுக்களின் குழுவே பின் வளர்ச்சியடைந்து வண்ணாத்திப்பூச்சியாகின்றது. இவ்வணுக்கூட்டத்திற்கேற்படும் மாறுதல், ஒரு பழைய வீட்டை உடைத்து அப்பொருள்களைக் கொண்டே ஒரு புது வீட்டைக் கட்டுவதைப்போன்றதாகும்.

**பொ. சிவராமலிங்கம்**

முழுவதும் வளர்ச்சியுற்ற வண்ணாத்திப்பூச்சி பட்டுக்கூண்டிலிருந்து புறப்பட்டவுடனே, சைக்கிள்சக்கரத்திற்குக் காற்று அடிப்பது போலத் தன் சிறகுகளுக்குக் காற்றை ஊதும். அதனால் அதன் சிறகுகளுக்கு நல்ல வடிவமும் விரிவும் ஏற்படும். பறக்க முடிந்தவுடன் அது தனக்கு ஒரு சோடியைத் தேடிப்பறக்க ஆரம்பிக்கும்.

Papillae Bookiyanor என்னும் ஒருவகை வண்ணாத்திப் பூச்சியினத்தில் ஆயிரம் ஆண்பூச்சிகளிற்கு ஒரு பெண் பூச்சி விதமேயுண்டு.

† † †

வண்ணாத்திப் பூச்சி, பூக்களிலுள்ள தேன், பழச்சாறு, மரச்சாறு ஆகியவற்றையே உண்டு சீவிக்கின்றது. அது ருசியை உணர்ந்துகொள்ளும் விதம் மிக அதிசயமானது. மற்றப் பிராணிகள் எல்லாம் நாவினால் ருசியை உணர்கின்றன. ஆனால் வண்ணாத்திப் பூச்சி மாத்திரம் தன்காலினால் ருசியை உணர்ந்துகொள்ளுகின்றது. அது காலினால் ருசியை உணர்கின்றதென்பதை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள். அதன் காலைப் பழச்சலத்தில் படும்படியாக வைத்தால் அது தன் நாக்கை நீட்டுகின்றது ஆனால் தண்ணீரில் தொடும்படியாக வைத்தால் எவ்வித மாறுதலையும் அடைவதில்லை. அத் தண்ணீரில் கொஞ்சம் கொஞ்சமாகச் சர்க்கரையைச் சேர்த்தால் அது நாக்கை நீட்டத் தொடங்குகின்றது. எனவே சுவையைக் காலினாலேயே உணருகின்றது' என்பதை நிரூபிக்க இதுவேபோதுமானது. மனிதர்களின் நாவிலும் பார்க்கச் சுவையை உணர்வதில் வண்ணாத்திப் பூச்சியின் கால்கள், 256 மடங்கு சக்தி வாய்ந்தவை. இவற்றையெல்லாம் விஞ்ஞான ஆராய்ச்சி வெளியிடுகினறது.

சுவையை உணர்வதைப் போலவே மணத்தை உணர்வதிலும், சில மணங்களை உண்டாக்குவதிலும் வண்ணாத்திப் பூச்சி சிறந்தது. மிகு வெப்ப நாடுகளிலுள்ள சில வண்ணாத்திப் பூச்சி யினங்கள் துர்க்கந்தம் வீசுவன. சில மிக நாகரீகமானவை. அவை தம் இறகுகளிலுள்ள ஒருவித சுரப்பிகளிலிருந்து நறு மணமுள்ள வாசனைத் திரவியத்தை உண்டாக்கும். பின் அதைத்தான் விருப்பும் காதலியின்மீது மெதுவாகத் தடவும். சிலவகைகள் சுருட்டுப்பிடிப்பவர்களின் வாயிலிருந்து வரும் துர்க்கந்தத்தையும், சில சொக்கலேட் வாசனையையும் உண்டாக்கும். வண்ணாத்திப் பூச்சிக்கு மூக்கில்லை. எனவே அது வாசனையைத் தன் உணர் கொம்புகளின் மூலமாக உணர்கின்றது. அவ் வுணர்க் கொம்பின் மீது கொஞ்சம் நிலநெய்யை (Vaseline) தடவினால், அதற்கு வாசனையை உணரமுடியாது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது தேசத்தின் மாமா

ஸ்ரீலங்காவின் தந்தையென்று சொல்லிக்கொள்வதிற் சிலர் பெருமையடைகின்றனர். ஆனால், ஜாக்கஸ் தம்மைத் தேசத்தின் மாமா என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றார். இக் கட்டுரை டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. —ப.ர்.

**தேசத்தின் மாமா என்று சொல்லிக் கொள்ளுவதற்கு எனக்கே உருமையுண்டு. அந்த உரிமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில், யார் தான் தம்மைத் தேசத்தின் தந்தையெனச் சொல்லித் திரிந்தாலும் எனக்கு ஆட்சேபமில்லை. இதுதான் எனது நிலைமையாகும்.**

ஜாக்கஸ் மாமாவின் நெஞ்சோடு கொஞ்சிக் குலாவிய ஸ்ரீ லங்கா எத்தனையோ வருடகாலமாகத் தனது இரகசியங்களையும் அவருக்குத் தெரிவித்திருக்கின்றது. சுருங்கக் கூறின் ஸ்ரீலங்கா தனது உள்ளத்தையே ஜாக்கஸ் மாமாவுக்கு அப்படியே திறந்துகாட்டியிருக்கின்றது. இத் தேசிய நங்கி (சிங்களர் இளைய சகோதரியை நங்கி யென வழங்குவர்) சுகத்துக்கும் துக்கத்துக்கும் ஓர் இருப்பிடமாகவே விளங்கிவருகின்றாள். அதே போன்று சுதந்திரம் பெற்றுள்ள மக்களின் உன்னத இலட்சியங்களையும் இவளே தாங்கிவந்துள்ளாள். ஸ்ரீலங்காவின் பிரபலம்வாய்ந்த பிரஜை ஒருவருக்குத் **தேசத்தின் தந்தை** என்ற பட்டத்தைச் சூட்டுவதற்குச் சுதந்திர தினம் போன்ற சுக தினமே மிகவும் பொருத்தமான ஒரு நாளாகும்.

இந்தப் பெருமை எனக்கு மட்டும் பிரத்தியேகமான தொன்றன்று. இப்படி நான் கூறும்போது மந்திரிமாரும், மேயர்மாரும், பிரதிநிதிகள் சபை அங்கத்தினரும் கூறுவதைப் பின்பற்றியிருக்கின்றேன். "இந்தப் பெருமை என்னைப் பிரதிநிதியாகத் தெரிந்த மக்களுக்கே உரியது" என்று அவர்கள் மிகவும் அடக்க ஒடுக்கமாகப் பல சந்தர்ப்பங்களிற் கூறி வருவதைப் பலரும் கேட்டிருப்பார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு நன்மை பயக்க வேண்டுமாயின் இந்த மேற்கோளை நான் மிகவும் கவனமாகவே கையாளவேண்டியவனாக இருக்கின்றேன். இத்தகைய நன்மையான விஷயங்களின் தன்மையும் நோக்கமும் பின்வரும் கடிதங்களிலிருந்து தெற்றெனப் புலப்படும். இவை சமீபத்திற் கிடைத்த கடிதங்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டவை.

## I

அன்புள்ள ஸ்ரீ ஜாக்கஸ்
அறிவது:

**பு**திதாக நிர்மாணிக்கப்படுகின்ற அனுராசபுர நகரத்தின் வாயிலிலே ஒரு கருங்கற்றூண் நாட்டப்படுகின்றது. அதன் உச்சியில் வாள் உருவி நிற்கும் சிங்கமும் செதுக்கப்பட்டுள்ளது. தவிர, அத்தூணிலே எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களின் பெயரும் பொறிக்கப்படுகின்றது. இந்த அநீதி நிகழாவண்ணம் தாங்கள் ஏதும் செய்யமுடியுமா? தகாத இச் செய்கையைக் கண்டித்து இரு மாபெருங் கூட்டங்கள் பரிசுத்த நகரமாகிய அனுராதபுரத்தில் நடைபெற்றன. காலஞ்சென்ற ஹரிச்சந்திர பிரமசாரியம் என்பவரே இந்தப் பெருமைக்கு உண்மையாகவே உரிமை பூண்டவரார். அத்துடன் ஸ்ரீ கே. டி. டேவிட் என்பவரையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர் இன்று ஒரு மந்திரி போலப் பெருமையுடன் விளங்குகின்றார்.

ஸ்ரீ பண்டாரநாயகா அவர்கள் பிறப்பதற்கு முன்னரே எனக்குத் தான் இந்த யோசனை உதித்தது. பரிசுத்தமான பகுதியிலிருந்து நகரத்தை அப்பால் அகற்றி அமைக்க வேண்டுமென்ற அவசியத்தை நானே முதல் உணர்ந்து அதைப் பகிரங்கப் படுத்தினேன். இது எவ்வாறு நடந்ததென்பதையும் கூறிவிடுகின்றேன்; நானும், எனது சகோதரன் புஞ்சி பண்டாவும், அவருடைய மூன்றாவது மனைவி டிங்கிரி மெனிக்காவும், வேறு பல நண்பர்களுமாக ஒரு முறை அனுராதபுரத்துக்கு யாத்திரை செய்தோம். அங்கு கிலமடைந்து கிடக்கும் சகல கோயில்களையும் மாட மாளிகைகளையும் பார்த்த பின்னர் களை தீர்த்துக்கொள்ளுவதற்காகத் தேநீர் கடை ஒன்றினுள்ளே அனைவரும் புகுந்தோம். ஆயாசம் தீரத் தேநீர் அருந்திய பின்னர் ஒரு கோப்பை தேநீரின் விலையாதெனக்கேட்டோம். கடைக்காரன் பத்துச் சதம் என்று சொன்னான். ஆனல் உண்மையாகவே ஒரு கோப்பை தேநீர் ஆறு சதத்துக்கே விலைப்படுகின்றதென்பதை நாங்கள் அறிந்துள்ளோம். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக இருந்தது. கோப மிகுதியாற் பலத்த குரலிற் பின்வருமாறு உரக்கக்கத்தினேன். "கீழ்நாட்டு வியாபாரிமார் இப்புனித பூமியை அசுத்தப் படுத்தியதால் ஏற்பட்ட பலன் இதுதான். இவர்களைக் கழுத்திலே பிடித்து வெளியாலே தள்ளிவிட வேண்டும்."

நான் இப்படிக் கத்தி ஐம்பது வருட காலத்துக்குப்பின்னர்தான் ஸ்ரீ பண்டாரநாயகா வந்து அவர்களைத் தள்ளுகின்றார். ஆனல் இது அவருடைய யோசனையல்ல. நான் ஒருவனே இப்படிச் செய்யவேண்டுமென முதலாவதாக எண்ணினேன். ஆகவே, வாள் ஏந்திய சிங்கத்தின் கீழ் யாராவது ஒருவரின் பெயரை எழுத வேண்டுமானல் அதற்கு எனது பெயரே உரிமை பூண்டுள்ளது. மந்திரிக்கு இது விஷயத்தில் எவ்வித உரிமையுமில்லை. இது சத்தியம். அவர் தம்மைத் தேசத்தின்கூரியவாள் எனநினைத்துக் கூவிக்கொண்டு திரிந்தாலும் நான் அதற்குப் பயப்படப் போவதில்லை.

ஏதோ, நீர் இது விஷயத்திலே தலையிட்டு நீதியை நிலைநாட்டி வைப்பீரென நினைக்கின்றேன்.

இங்ஙனம்,
நீதிவழிச் செல்லும்
**களுபண்டா புசல்பொக்கே**

## II

அன்புள்ள நங்கி,

தயவுசெய்து இதற்கு மாத்திரம் மறுக்கவேண்டாம்.

எம்மைப்போன்ற சில நவீனப் பெண்மணிகள் பரந்த மனப்பான்மை பூண்டவர்களாக இருக்கின்றனர். இலங்கையின் பழங்காலப் பெருமைக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமெனப் பலர் கதறித் திரிபவர்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இப்படிப் பேசித்திரிபவர்கள் வெறும் ஆஷாட பூதிகளாவார்கள். அவர்களுக்கு உண்மையாகவே இதில் நம்பிக்கை இருக்கிறதா? அன்றேல், நீர்தான் இதை நம்புகின்றீரா? உமக்கு இதில் அனுதாபம் இருக்குமாயின் நான் ஒரு வழி சொல்லுகின்றேன் நீர் அதன்படி நடந்து உமது அனுதாபத்தைத் தகுந்த முறையில் உலகறியச் செய்துவிடலாம்.

முதலாவதாக நீர் செய்ய வேண்டியதொன்றுண்டு. அதாவது: 'மரதன்' என்று சொல்லப்படும் இந்த மாபெரும் ஓட்டத்தில் எதற்காக ஆண்கள் மட்டும் பங்கு பற்றவேண்டும்? பெண்களுக்கு ஆண்களைப்போன்று ஓடக்கூடிய சக்தியில்லையென நினைத்தால் அவர்களையும் ஒருமுறை சோதித்துப் பார்க்க வேண்டியதுதானே? நாங்கள் காத்திரமற்றவர்கள் என நினைத்தாற் சரி அதையும் ஒருமுறை பார்த்துவிடலாம். பிரதமர் போன்ற கிழவர்களின் தலைமையில் ஒன்றும் செய்யமுடியாது. இதற்கெல்லாம் சேர் ஒலிவர் இங்கு இருக்கவேண்டும். சேர் யோன் இப்போதெல்லாம் வேறு மனுஷனாகி விட்டார். நான அவரைப்பற்றி ஏதோ எல்லாம் எண்ணியிருந்தேன். அந்த அபிப்பிராயத்தை இன்று மாற்றவேண்டியிருக்கின்றது. அந்தக் கேள்விக்கு அவர் பிரதிநிதிகள் சபையிற் கொடுத்த பதிலைக் கேட்டீரா? அவர் அதை மீண்டும் ஒருமுறை வெளியாகவே வந்து கூறாது விட்டதில் ஆச்சரியமில்லை.

இனி, விஷயத்துக்கு வருகின்றேன். தற்காலப் பெண்மணிகளுக்குப் பழைய காலத்து முறைகள் பிடிக்கவேயில்லை. நாங்கள் பரந்த மனப்பான்மைகொண்ட நவீன நாரிமணிகள். நாங்கள்சிலர் ஒன்று கூடி இலங்கையின் பண்டைப் பெருமைக்குப் புத்துயிர் ஊட்ட முனைந்துள்ளோம். சிகிரியா காலத்தையே எமக்கு முன் மாதிரியாகக் கொண்டுள்ளோம். சுதந்திர தினத்தன்று பெண்களைப் புறம்பாக ஒதுக்கி வைக்கத் தீர்மானித்திருக்கின்றபடியால் நாங்கள் எங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டத் துணிந்துகொண்டோம். நாங்களும் ஸ்ரீலங்காவின் நாலு கோடிகளிலிருந்தும் 'மரதன்' ஓட்டம் ஓடத் தீர்மானித்துள்ளோம். சிகிரியாக்குகை ஓவியத்திற் காணப்படும் மலர் மங்கைகள் அணிந்துள்ள ஒற்றைச் சேலையையே நாங்களும் கட்டிக் கொள்ளப்போகின்றோம். இது எமது சுதந்திர உணர்ச்சிக்கு ஓர் உதாரணமாக இருப்பதுடன், நாங்கள் ஆண்களிலும் பார்க்க வேகமாக ஓடுவதற்கும் இது போதிய துணை புரிகின்றது!

இதுவிஷயத்தில் உமது பழைய 'நங்கி' இருக்கின்றாளே. அவள் என்ன பங்கு எடுத்துக்கொள்ளப் போகின்றாள்? நாங்கள் ஒரு ஓலைச் சுருளைக் கையிலே கொண்டு வரப்போகின்றோம். அதிலே **தேசத்தின் மாமா** என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கும். இந்தப் பெருமையை ஏற்க நீர் சம்மதிக்கின்றீரா? ஆம், நீர் சம்மதித்தேயாக வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள
**சூரிய லங்கா பூரணம்**

**ஜாக்கஸ் தான் பகிடிக்கும்**
**ஜாக்கஸ் தான் பகட்டுக்கும்**
**கேடுகாலம் பிடித்த**
**கேர்வத்தை யடக்க**
**ஜாக்கஸ் தான் இருக்கட்டும்**

ஆகவே, சிகிரியா நாகரீகத்துக்கு ஏற்ப 'மரதன்' ஓட்டம் ஓடுவதை நான் விரும்பினலும், அதை நான் எதிர்ப்பதற்குக் காரணம் உண்டு. இத்தனைக்கும் நான் ஒரு கர்நாடகப் பேர்வழியல்ல. எத்தனையோ வழிகள் இருக்கும்போது நீங்கள் ஏன் சுவாதத்தாற் பீடிக்கப்பட்டு இறக்க வேண்டுமென்பதே எனது கட்சி. இக்காரணத்துக்காக நீங்கள் என்னைத 'தேசத்தின் மாமா' என்று கூப்பிட மறுத்தால், சரி அப்படியே ஆகட்டும்.

---

## உலக விவகாரம்

# சமாதான முயற்சி

**சீனத்தின் தேசியத் தலைவர்கள் எவ்வாறு சமாதானத்தைக் பெறலாமென நினைந்து தடம்புரளுகையிற் கொம்யூனிஸ்டுகள் தேசிய அரசாங்கத்தின் சக்தியை அடியோடு குன்றச் செய்வதற்கான வழிவகைகளைக் கையாண்டு வருகின்றனர்.** சீனத்து அரசாங்கம் சமாதானத்தை விரும்புவதாகப் பாசாங்கு செய்து வருகின்றதென்பதே கொம்யூனிஸ்டுகள் தலைவரான மோ-ஸி-ரங் என்பவரின் அபிப்பிராயமாகும். ஆகவே, குறித்த பகுதிகளின் தலைவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடாத்துவதே சிறந்ததென அவர் தமது சகாக்களுக்குத் தெரிவித்திருந்தார். நாங்கிங், கென்ஸி என்ற எல்லைக்குள் யுத்தம் நடைபெறுகின்றது. இங்கு சமாதான ஒழுக்குகளைப் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தேசிய அரசாங்கத்தைச் சீர்குலையச் செய்வதற்கு இதுவுமோர் சிறந்த வழியாகும்.

### தயாரில்லை

ஆனற் சமீபத்திற் கிடைத்த செய்தியின் பிரகாரம், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக எந்த வட்டாரங்களிலிருந்துவரும் சீனத்து அரசாங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசச் சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் இன்று தயாராகவில்லையென அறியக் கிடக்கின்றது. சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான பூர்வாங்க வேலைகள் இன்னும் முடிவடையவில்லையெனக் கொம்யூனிஸ்ட் அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

இதற்கு முன்னர் கிடைத்த செய்தியின்படி யாங்ஸி நதியைக் கடந்துசென்று தாக்குவதற்காகத் தமது படைகளைத் திருத்தியமைக்கும் கொம்யூனிஸ்டுகள் சீனத்து அரசாங்கம் ஏற்கனவே நியமித்த ஐந்துபேரடங்கிய சமாதானத் தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த இருவருடன் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் நடாத்தச் சம்மதித்துள்ளனர் எனக் கூறப்பட்டது.

### வடமேற்குச் சீனம்

வடமேற்குச் சீனத்திற் பெரிய முஸ்லீம் பிரதேசங்களுள. இப்பகுதிகளின் தலைவரான தளபதி மா-ஹங்-குவே கொம்யூனிஸ்டுகளுடன் சமரசம் என்ற பேச்சே வைத்துக்கொள்ளக் கூடாதெனத் தெரிவித்த ஓர் அறிக்கையும் வெளியிட்டுள்ளார். லாஞ்சோ, கான்ஸி மாகாணத்தின் தலைநகராகும். இங்கு இராணுவ அரசியற்றலைவர்கள் கொண்ட கூட்டத்தில் வடமேற்குச்சீனம் கொம்யூனிஸ்டுகள்மூலம் விடுதலையை விரும்பவில்லையெனவும் அப்பகுதி மக்களே தங்கள் விடுதலையைக் கவனித்துக்கொள்வார்களெனவும் மா-ஹங்-குவே தெரிவித்தார்!

யாங்ஸி நதியைக் கடந்து அப்பாற்செல்லக் கொம்யூனிஸ்டுகள் பலத்த திட்டம் போட்டு வருகின்றனர். இருந்தபோதிலும் இப்போது நிலவும் ஓய்வானது பல வாரகாலம் நீடிக்குமெனவும் குறிப்பிடவேண்டியிருக்கின்றது.

### ஸ்டாலின்—ட்ரூமன்

மேற்றிசை நாடுகளுக்கும் ரூஷியாவுக்குமிடையே நேசபாவம் ஏற்படுவதற்காகச் சிறிது முயற்சித்தாலும் அது நலமாகவேயிருக்குமென பிரித்தானிய பிரதமர் அட்லி கருதுகின்றார்.

இவர்கள் இருவரையும் லண்டனிற் சந்திப்பதற்கு பிரதமர் அட்லி ஏற்பாடு செய்யலாமே எனத் தொழிற் கட்சி அங்கத்தவர் ஒருவர் யோசனை கூறியதற்கு அட்லி அவர்கள் கூறியதாவது: "ஸ்டாலினே ட்ரூமனே எனக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்ததேயில்லை. தவிர உலக சமாதானத்துக்காக எம்மால் இயன்றதைச் செய்வேன், அதற்காக இருவரையும் லண்டனிற் சந்திக்கும்படி கேட்பது முறையல்ல."

### பாலஸ்தீனம்

பாலஸ்தீனம்பற்றி இஸ்ரேவேல், எகிப்திய பிரதிநிதிகளிடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் முட்டுக்கட்டை உண்டாகிவிட்டதாகத் தெரிகிறது. ஐக்கியநாடுகள் சங்கத்தின் மத்தியஸ்தரான டொக்டர் பஞ்ச் எகிப்திய தூதுக் கோஷ்டியினரைக் கண்டு, தக

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம், சர்வதாரி, மாசி 2

— காந்தி ஆண்டு 80 —


## புகையிரதப் பரிபாலனம்

அரசினர்க்கு மிக்க கவலையையும் சங்கடத்தையும் இப்போது உண்டுபண்ணிவருவது புகையிரதப்பகுதியெனக் கூறின், அது மிகையன்று. வருடா வருடம் இப்பகுதியைப் பரிபாலிக்கும் விஷயத்தில் அரசினர் இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் நட்டமடைவதாக அறிகின்ருேம். இதைத்தடுக்க அரசினர் பன்முறை முயன்றும் காரிய சித்தி ஏற்படவில்லை. மேன்மேலும் நட்டம் அதிகரித்துச் செல்கின்றதேயன்றிக் குறைவதாகக் காணும். இப்பகுதியில் அரசினர் செலவினைக் கூட்டுவதிற் கருத்தாகநிற்கின்ருரேயன்றி, இலாபம் அடையவழிவகைகளை நோக்குகின்ருரில்லை. இந்தியா, இங்கிலாந்து முதலிய நாடுகளிற் புகையிரதப்பகுதியால் எப்பொழுதாவது நட்டம் ஏற்பட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை இதற்குமாருகப் பெரு லாபம் கிடைப்பதாகவே அறிகின்ருேம். விஷயமிவ்வாருக, இலங்கையில் இதற்கு நேர் விரோதமாக நிகழ்வது பெரும் விந்தையாகின்றதல்லவா?

இவ்விதமாக ஏற்படும் நட்டத்தைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்பதை ஆராய்ந்து கூற ஒரு விசாரணைச் சபை ஏற்படுத்தப்பட்டது. அச்சபையின் தலைவர் திரு. டி. ஆர். இரத்தினம் என்பவர் நீண்டவோர் அறிக்கை எழுதியுள்ளார். அதன் முதற்பகுதி இப்போது வெளியாகியுள்ளது. அதில் எடுத்துக்காட்டப்பட்ட விஷயங்கள் பொதுவாக முன்னர் அறிந்தனவாயினும், நட்டத்தைத் தடுக்க அவர் கூறும் திருத்தங்கள் பெரிதும் நோக்கற்பாலன. வீதிகளிற் செல்லும் 'மோட்டார் பஸ்'களுக்கும் புகைரதங்கட்கும் நெருங்கிய போட்டியே இதற்குப் பிரதம காரணமென்று விளக்கியிருக்கின்றனர். பிரயாண வசதிகள் அரசினர் மேற்பார்வையில் இருக்கவேண்டுமென்றும் 'பஸ்' ஓடும் மார்க்கங்களை வரையறுத்துக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் அரசினர்க்கே இருக்கவேண்டுமென்றும் இவ்வறிக்கை கூறுகின்றது. இது சாலவும் ஏற்றதென்பதே எமது அபிப்பிராயமாகும். புகையிரதவசதிகள் போதியளவுள்ள மார்க்கங்களில் 'பஸ்' ஓடுவது எப்படி நியாயமாகும்? போக்குவரவு வசதிகள் கிடையாத மார்க்கங்கள் எத்தனையோ உள. அவைகளில் 'பஸ்' பிரயாணம் கிடைக்கச் செய்யலாமே. அத்துடன் மிக நீண்டதூரங்கட்குப் புகையிரதவசதிகள் இருப்ப, அம்மார்க்கங்களிலும் 'பஸ்' போட்டி ஏற்படின், புகையிரதப்பகுதியினர் நட்டமடையாதிருப்பதெப்படி?

மேலைத்தேச நாடுகளில் 'பஸ்', புகையிரதம் ஆகிய இருவகைப் பிரயாண வசதிகள் போதியளவு இருந்தும் ஒன்று காரணமாக மற்றையது நட்டமடைய வில்லையாம். காரணம் இரண்டும் ஒன்ருேடொன்று நெருங்கிப் போட்டியிடாவண்ணம் போக்குவரவு ஒழுங்குகளைத் திறமையுடன் அரசினர் நிர்வாகஞ்செய்வதே. அம்முறைப்படி இலங்கையில் ஏன் செய்யக்கூடாது? அத்துடன் அளவில்லாத 'லொறி'கள் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் அதிகரித்துவிட்டன. தெருவீதிகள் அடைந்துள்ள கேவலநிலைக்கு இந்த 'லொறி'களும் ஓரளவுக்குக் காரணமாகும். நீண்டதூரங்கட்கு இந்த 'லொறி'கள் சாமான்கள் ஏற்றிச் செல்ல முற்பட்டபின், புகையிரதப்பகுதியினர் சாமான்கள் ஏற்றிப் பெறும் இலாபத்தையும் இழந்தனர். இந்த 'லொறி'கள் நடமாட்டமும் வரையறுக்கப்பட வேண்டும். அத்துடன் புகையிரதப் பகுதியில் வேலை பார்க்கும் உத்தியோகத்தர் தமது கடமையை ஒழுங்காகச் செய்யாது போவதாலும் நட்டங்கள் ஏற்படுகின்றன. அரசினர்க்கு வரவேண்டிய பணம் பன்மடங்கு கரைந்து வடிந்து நழுவிப்போகின்றது. புகையிரதப் பகுதியிற் கைலஞ்சம் இருப்பதாகக் கூறப்படும் பேச்சையும் முற்ருகத் தள்ளிவிட வியலாது. இவைகளைத் தடுக்கவும் அரசினர் வழி காணவேண்டும்.

விசாரணைத்தலைவர் கூறும் ஒரு விஷயத்தை நாம் சிறிதும் ஏற்கவியலாது. மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளின் கட்டணத்தை ஏற்றுவது அவசியமென்கின்ருர். எங்கு பார்த்தாலும் பொதுமக்களுக்குத் தான் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நட்டம் வருகின்றது. சமீபத்திலே தபாற்கந்தோர்ப் பகுதியினரும் சில கட்டணங்களை உயர்த்திச்சாதாரண மக்களுக்கே நட்டத்தை வருவித்தனர். புகையிரதப் பகுதியின்வருமானம் பெரும்பாலும் சாதாரண மக்களிடமிருந்தே கிடைக்கின்றது. மேன்மேலும் அவர்கட்கே வரி விதிப்பதாயின் அவர்கள் தாங்குவதெப்படி? மூன்ரும் வகுப்பு வண்டிகளில் இப்பிரயாணிகள் மிருகங்களைப் போலவே பிரயாணஞ் செய்கின்றனர். உயர்ந்த வகுப்புப் பிரயாணிகள் அடையும் சௌகரியங்களில் நூற்றுக்கு ஒரு பங்காவது அவர்கட்கு உண்டா? மற்றைய நாடுகளில் இவ் வகுப்புப் பிரயாணிகட்குப் பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கக் காணலாம். அப்படியொன்றுஞ் செய்யாது கட்டணத்தை மாத்திரம் உயர்த்துவதென்பது எப்படிப் பொருந்துமோ? மேலும் வேறு பல காரணங்களாலும் நட்டம் ஏற்படும் போது பொதுமக்களை மேன்மேலும் வருத்துவது முறையன்று.

---

## அடிமை மனப்பான்மை

இலங்கை அரசியல் அதிகாரத்தை வகிக்கும் கட்சியினர் இன்னும் தமது அடிமை மனப்பான்மையை நீக்கிக்கொள்ள இயலாதிருப்பது எவ்வளவு வெட்கமான விஷயம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்திருக்கத் தடையில்லாதிருந்தும், இவர்கள் ஏகாதிபத்தியத்துள் அடங்கி இருக்கவேண்டுமென்று பிடிவாதமாக நிற்கின்றனர். இது லண்டனிலுள்ள அரசியல் வாதிகட்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததாயினும், அவர்கள் சந்தோஷத்துடன் இத் தீர்மானத்தை மெச்சிக்கொண்டனர். ஏகாதிபத்தியத்துள் குடியேற்ற நாடாக இலங்கை இருப்பினும், தமக்குச் சம உரிமையும் பூரண சுதந்திரமும் உண்டென்று தம்மளவில் இன்புறுகின்றனர். தம்மீது இலங்கை மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதைக்கண்டு லண்டன் டைம்ஸ் பத்திரிகை வந்தனங் கூறுகின்றது. மற்றைய நாடுகளின் செல்வத்தைச் சுரண்டி வாழும் ஆங்கில ஏகாதிபத்தியக் கட்சியினர் இப்படிக் கூருதிருப்பதெப்படி? பழையபடி ஓரளவுக்காயினும் தமது கபட நாடகங்கள் இலங்கையில் பலிக்குமென பிரிட்டிஷார் நம்புகின்றனர். மேலைத்தேச வாழ்விலும் தொடர்பிலும் மிகவும் அபிமானம் பூண்டவர்களே இப்போது இலங்கையின் அரசியற் பொறுப்பினை வகிக்கின்றனர். இவர்களைத் தட்டிக்கொடுக்கடொக்டர் ஐவர் ஜெனிங்ஸ் போன்ற அரசியல் நிபுணர்களும் இருக்கக்கூடியளவு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நட்பு ஏற்படாதிருக்கச் செய்வதுதான் ஆங்கில இராசதந்திரத்தின் இப்போதைய செயலாகின்றது. இந்தியா பிரிட்டிஷாருடன் ஒத்து வாழ விரும்பவில்லையா? இலங்கையும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? என்று சிலர் கேட்கின்றனர். இந்தியா பிரிட்டிஷாருடன் நாடுக்தொடர்பும் இலங்கையரசினர் வைத்துக்கொள்ள விரும்பும் நட்பும் ஒரு தன்மையதாவென்று கேட்கின்ருேம். இந்தியா முதுகெலும்புடன் நிமிர்ந்து நின்று ஏகாதிபத்தியத் தொடர்பினை முற்ருக நீக்கிவிட்டது. இலங்கையோ அத்தொடர்பு வேண்டுமென்கின்றது இந்தியாவோ நீதிக்கும் நியாயத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் விரோதமான மேலைத் தேசக் கொள்கைகள் பழக்க வழக்கங்களை முற்ருகப் பகிஷ்கரித்துவிட்டு, இந்தியாவின் பாரம்பரைக்கும் பெருமைக்கு மேற்ப முன்னேறிச் செல்கின்றது. இலங்கையிலோவென்ருல், மேலைத்தேச மணமே இன்றும் பெரு மோகத்துடனும் பிடிவாதத்துடனும் கைக்கொள்ளப்பட்டுகின்றது. அவர்களுடைய ஆங்கில பாஷை என்றும் இருக்க வேண்டுமாம். குதிரைப் பந்தயம் நடக்கவேண்டுமாம். மதுபானமும் அலங்கோல நடனமும் கட்டாயம் இருக்கவேண்டுமாம். இங்கிலாந்தில் இலங்கையின் சுதந்திரம் வேடிக்கையாகின்றது. உண்மையாகச் சுதந்திரத்தைப் பெற்ற நாடு இலங்கையாயின், இத்தீமைகளை எவராவது ஆமோதிப்பாரா?

---

## முத்துரங்க முதலியார் மறைவு

தமிழ் நாட்டின் மாபெருந் தலைவரான ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியார் தமது 67-வது வயதில் 5-2-49 காலை இவ்வுலகை நீத்தார். இத் தேசபக்தனின் ஆன்மா சாந்திபெறுவதாக.

---

## வீரத் தமிழன் கௌரவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் இந்தக்கப்பலில் அவர்பிரயாணம் செய்தார். இது ஆயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. அதே காலத்திற்ருன் மலாயாவிலும சுமத்திராவிலும், ஜாவாவிலும் இந்தியர்களின் ஆட்சி நிலை நாட்டப்பட்டது. பிறகு ஆயிர வருஷகாலம் இந்திய மகாசமுத்திரம் இந்துக்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அதற்குப்பிறகு அராபியர்கள் கடல் ஆதிக்கம் பெற்ருர்கள்.

இந்துக்கள் கடல் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் எந்த நாட்டுக் கப்பலும் தடையின்றிப் போக அனுமதித்திருந்தார்கள். கடற் கொள்ளைக்காரர்களை அடக்கிக் கடல்மார்க்கங்களிற் பயமின்றிச் செல்லச் செய்திருந்தார்கள். நமது முன்னோர்கள் கடல்மார்க்கத்தில் தனி ஆதிக்கம் கோரவில்லை. எல்லாக்கப்பல்களும் கடற்பாதைகளிற் சுதந்திரமாகவும் நிர்ப்பயமாகவும் போகக்கூடியதாயிருந்தது.

---


## கிராம முன்னேற்றம்

### கந்தரோடைக் கூட்டம்

சென்ற 6-2-49-ல் நடைபெற்ற கந்தரோடை கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் வலி வடக்குக் காரியாதிகாரி ஸ்ரீ த. பாலச்சந்திரன் அவர்கள் பேசும்போது கிராம முன்னேற்றச் சங்கத்தினுல் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும், கிராமத்து வாலிபர்கள் ஒரு தொண்டர் படையாகச் சேர்ந்து பொலிஸாருடன் ஒத்துழைத்தால் களவுகள் குறையும் என்றும், கிராமத்தவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு வேண்டிய வழிவகைகளைக் கிராம முன்னேற்றச் சங்கம் ஆராய வேண்டுமென்வும் கூறப்பட்டார்.

—நிருபர்

---




அந்தக் காலத்திலே, அதாவது இலங்கை சுதந்திரம் பெருமல் பிரிட்டனுக்கு அடிமையாக இருந்த காலத்திலே, தபாற் பகுதிப் பிரதம அதிகாரிபோன்ற பெரிய அரசாங்க ஊழியர்கள் பிற இடங்களுக்குப் போகும்போது சத்தம் சந்தடியின்றிப் புறப்படுவார்கள். யாழ்ப்பாணம் அல்லது கண்டிப்பகுதிகளிலுள்ள தபாற் கந்தோரைப் பார்வையிட விரும்பினுல், அவர்கள் மெதுவாகச் சென்று நிர்வாகம் சீராக நடைபெற்று வருகின்றதா எனப் பரிசோதிப்பார்களாம். அங்கு வேலை செய்பவர்களும் இருண்டது விடிந்தது ஒன்றுந் தெரியாமல் விழிப்பார்களாம்.

❁

### இந்தக் காலத்திலே

சுதந்திரம் பெற்றுள்ள இலங்கையிலே இப்போதெல்லாம் விஷயங்கள் அறம்புறமாக நடைபெறுகின்றன. அரசாங்க அதிகாரி ஒருவர் வெளிக்கிளம்புகின்ருர் என்பதை அறிந்தவுடன், அவருக்குப் பந்தம் பிடிப்பவர்கள் அங்கும் தந்திபேசி, இங்குந் தந்திபேசித் தங்கள் எஜமானுக்கு உபசாரங்கள் செய்வதற்கான திட்டங்களைப் போட்டுவிடுகின்றனர். ஆலவட்டம், மாலை, மத்தளம் என்பன புடைசூழ அதிகாரி முன்னர் மண்டியிடுவார்கள். இவ்வளவு அலங்காரங்களுக்கும் யாருடைய காசு கரைகின்றதென்பதே முக்கிய கேள்வியாகும். இந்தத் தமாஷிலே பங்கு பற்ருது ஒதுங்கிவிடுபவர்கள் பாடு பெரிய கஷ்டமாகிவிடுகின்றது பாவம் வேஷம்போட மறுத்ததற்காக அவர்களை வைத்து வாட்டுவது தர்மமாகாதே?

❁

### நகரமா? நரகமா?

யாழ்ப்பாணத்திலே ஸ்தல ஸ்தாபனப்பகுதி உதவி அதிகாரியாகப் பணியாற்றிய ஸ்ரீ சூரியகுமாரன் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார். அவருக்குஅன்பர்கள் அளித்தவிருந்து வைபவத்தின்போது அவர் யாழ்ப்பாண நகரத்தின் அழகை அற்புதமாக எடுத்துக் கூறினுர். அதைப் பத்திரிகைகளிற் படிக்கும் போது நாங்கள் யாழ்ப்பாண நகரத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை. ஒரு நரகத்தில் வசிப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. உடனே கண்களைக் கசக்கிவிட்டு யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்ருேம். ஆம். அது உண்மையாகவே ஒரு நரகம் போலவே காட்சியளிக்கின்றது. நகரசபை மேயரும், ஏனைய அங்கத்தினரும் யாழ்ப்பாணத்தை ஒரு நகரமாகத் திருத்தி அமைக்கும் வேலையை ஆரம்பித்து வைப்பார்களா என்ன?

❁

### கல்விக்கு அபாயம்!

இலவசக் கல்வி என்று வாய்திறந்து சொல்லுவதைத் தானும் விரும்பாத அதிகார வர்க்கத்தினரின் எண்ணத்துக்கு மாருக நாட்டிலே இலவசக் கல்வி ஏற்பட்டது. அதிற் சில குறைபாடு இருப்பது உண்மைதான். அதைத் திருத்திச் சீராக்குவதே முறை. அதை விடுத்து இலவசக்கல்வியால் நாடு குட்டிச்சுவராகி விட்டதெனப் பண முடைகளும், வேறு சில கட்சியினருங் கதற ஆரம்பித்து விட்டனர். இப்படி அழுது புலம்புவோருக்கு அரசாங்க சேவைப்பகுதியால் ஏற்பட்டு வரும் வேறு பாரிய வீண் செலவுகள் கண்களுக்குத் தென்படாமல் இருப்பதும் ஒரு விந்தையே. அரசாங்க அதிகாரிகளின் உல்லாச சிவியத்துக்கும் விமானப் பிரயாணத்துக்கும் ஆடம்பரச் செலவுக்கும் வாரி அள்ளிக்கொட்டும் பணம் சொற்பமா? இந்தச் செலவுகளை மட்டுப்படுத்தி மக்களின் பிறப்புரிமையான கல்வியை அவர்களுக்கு நல்ல முறையில் ஊட்டுவதே நீதியாகும்.

---

## கண்டிப் பிரதிநிதி பதவி இழந்தார்

பிரதிநிதிகள் சபையிற் கண்டித்தொகுதி அங்கத்தினரான ஸ்ரீ டி. பி. இலங்காரத்னவின் தேர்தல் செல்லுபடியாகாதென நீதியரசர் ஸ்ரீ நாகலிங்கம் சென்ற வியாழக்கிழமை தீர்ப்புக் கூறினுர்.

கண்டி நகரசபை அங்கத்தினரான ஸ்ரீ. ஏ வி. விக்கிரமரத்ன உட்பட அநேகர், ஒழுங்கீனமான நடவடிக்கைகளைக் கையாண்டார்களென்ற புகார்கள் சம்பந்தமாயும் குற்றவாளிகளாயிருக்கின்றனரெனவும் நீதியரசர் தீர்ப்பளித்துள்ளார். கண்டி நகரசபையின் மற்றொரு அங்கத்தினரான ஸ்ரீ பிரெட் டி' சில்வாவும் சட்ட விரோதமான முறைகளைக் கையாடினுரென்ற புகாரின்மீதும் குற்றவாளி எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

கடந்த கண்டித் தொகுதி அங்கத்தினர் தேர்தலிலே தோல்வியுற்ற அபேட்சகர்களில் ஒருவரான ஸ்ரீ பிரெட் டீ சில்வா என்பவரின் குணம், நடத்தை சம்பந்தமாகப் பொய்யான செய்திகளைப் பிரசுரித்ததாகவும் (2) அச்சுப் பதிப்பவர்கள், வெளியிடுபவர்கள் ஆகியோருடைய பெயர்கள், விலாசங்கள் இல்லாமற் சில்லறைப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டு விநியோகஞ் செய்ததாகவும், (3) லஞ்சம் கொடுத்ததாகவும், (4) வாக்காளர்களுக்கு விருந்துபசாரம் அளித்ததாகவும், (5) செல்வாக்கை அளவுக்குமீறி பிரயோகித்ததாகவும் ஸ்ரீ. இலங்கரத்ன மீது குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன.

அத்துடன் அவர் ஏழு வருட காலத்துக்குத் தேர்தலிற் போட்டியிடும் உரிமை போன்ற பிரஜா உரிமைகளையும் இழக்கின்ருர்.

### வழக்குச் செலவு

ஸ்ரீ. இலங்காரத்ன, வழக்குச் செலவுக்காக மனுதார்களுக்கு ரூபா 3500 செலுத்த வேண்டுமெனவும் நீதியரசர் உத்தரவிட்டார்.

---

## புகைரத வீதியில் பிரேதம்

கொடிகாமம் புகைரத வீதியிலே 13¾-ம் சட்டைக் கருகே 24 வயதுள்ள ஒரு வாலிபனின் பிரேதம் மூன்று தினங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலோட்டிய கனவான்

இற்றைக்கு நாற்பது வருடங்கட்குமுன் தூத்துக்குடியில் ஒரு சுதேசியக் கப்பல் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. அம் முயற்சியின் தலைவராக விளங்கிய பெரியார் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையாவார். கொழும்புடன் வியாபாரப் போக்குவரத்துச்செய்வதே இதன் நோக்கம். அப்போது இக்கம்பனி பிரிட்டிஷ் கம்பனியொன்றுடன் போட்டி செய்யவேண்டியதாயிற்று. இவ் விஷயமாகப் பெரிய தகராறுகள் ஏற்பட்டன. கடைசியில் இக் கம்பனி இராசத்துரோகமானதென்று முடிவாயிற்று. ஆங்கில அரசினர் இக் கனவானின் முயற்சியை முற்றாக நசித்துவிட்டனர். அவ்வளவில் நின்றாரா? இவ் வீரத் தமிழன்மீது இராசத்துரோகக் குற்றஞ்சாட்டி ஆறு வருடச் சிறைக்கும் இவரை அனுப்பினர். இக் கனவான் அடைந்த அளப்பரும் இன்னல்கள் விரிக்கிற் பெருகும். இவர் தேசியவாதியாக நின்றதே எல்லாவற்றிற்கும் காரணமாயிற்று. இன்று சுதந்திர இந்தியா இவரை மறக்கவில்லை. இவர் முயற்சியைக் கைவிடவில்லை. சென்ற புதன்கிழமை பிரதம தேசாதிபதி இராஜாஜி தூத்துக்குடி சென்று மறுபடி இந்தக் கம்பனியை உயிர்ப்பித்து வியாபாரத்தை நடத்த ஏற்பாடு செய்து வைத்தனர். வ. உ. சிதம்பரம் என்ற பெயருடன் மூதுரகப்பல் புதன்கிழமை ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியரால் மிதக்கவிடப்பெற்றுக்கொழும்புக்குப் பிரயாணமாயிற்று. இனி இந்தியரை பிரிட்டிஷார் இத் தொழிலில் நசித்துவைக்க இயலுமா? அதுவும் ஒருகாலம், இதுவும் ஒருகாலம்.

## காஷ்மீரில் அமைதி

### - இந்தியா -

#### காஷ்மீரில்

என்றுமில்லாத அமைதி இப்போது காஷ்மீரில் ஏற்பட்டுள்ளது. யுத்தம் நிறுத்தப்பட்டதும் காஷ்மீர் வாசிகள் அடைந்த ஆறுதலுக்கு எல்லையில்லை. கலகஞ் செய்த எல்லைப்புறவாசிகள் தமது உறைவிடங்கட்கு ஓட்டம்பிடிக்கின்றனர். பாகிஸ்தான் படையினரும் இந்தியப் போர்வீரரும் நேசபாவங் கொண்டாடுகின்றனராம். ஏதோ நற்காலம் வந்துள்ளதாகவே எண்ண வேண்டும். பாகிஸ்தான் இந்தியா ஆகிய இரு அரசினர்க்கிடையில் நல்லிணக்கம் பலவழியிலும் ஏற்பட்டுவருவது நற்கால அறிகுறியென்றே கூறவேண்டும். போதிய உணவுப் பொருள்களைக் காஷ்மீர் மக்கள் பெற்றுவருகின்றனர். இப்போது இச் சமஸ்தான அரசியலை நடத்தும் ஷேக் அப்துல்லா அவர்கட்கு முன்னரிலும் பன்மடங்கு மதிப்பும் விசுவாசமும் ஏற்பட்டு வருகின்றது. இச் சமஸ்தான மக்களின் சனசம்மதம் அறிதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இவ் விஷயத்தைத் தலைமை வகித்து நடத்த ஒரு தலைவரை ஐக்கிய நாடுகளின் சங்கம் நியமித்துவிட்டது. இந்திய அரசினர் காஷ்மீர் மக்கள் எண்ணத்துக்கு ஒருபோது மாறாகப் போகமாட்டார். பாகிஸ்தான் அரசினரும் சீராக நடந்துகொள்ளின் மேன் மேலும் பிணக்குகள் தோன்றக் காரணமில்லை.

#### பரோடா, கோலாப்பூர்

இவ்விரு சமஸ்தானங்களும் பம்பாய் மாகாணத்திலுள்ளன. மிகவும் பெருமையும் ஆதிக்கமும் வாய்ந்தன. பரோடா குஜாத் பிரதேசத்தில் உள்ளது. கோலாப்பூர் மருட்டியப் பிரதேசத்தைச் சார்ந்துள்ளது. இப்போது இவ்விரு சமஸ்தானங்களும் பம்பாய் மாகாண அரசியலில் சேர்ந்துவிட முடிவு செய்துவிட்டன. அதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. சர்தார் படேலின் ஆலோசனையை இச் சமஸ்தானங்கள் விரும்பி ஏற்றது பெரிதும் கொண்டாடப்பட வேண்டிய விஷயம். சமஸ்தான மன்னர்கள் இதுவரையில் சர்வாதிகாரத்துடன் அரசியலை நடத்திவந்தனர். இனி அப்படிச் செய்ய இடமில்லை. சமஸ்தான மக்கள் பொறுப்பிலேயே முழு அதிகாரமுஞ் செல்கின்றது. எனவே அரசியற் பாரத்தை முற்றாகக் கையளித்து விடுவதே உசிதமென்று இவர்கள் எண்ணினர். காலத்தையும் நிலையையும் நோக்குமிடத்து இது சாலவும் சிறந்தமுறையென்றே கூறவேண்டும். இவ்விரு சமஸ்தான அரசினரும் துணிவுடன் இம் முடிவைச் செய்தது போற்றப்பட வேண்டிய விஷயம்.

#### மடாதிபதிகள்

சென்னையரசினர் இப்போது புதிய திட்ட மொன்றினை அனுசரணைக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளார். அதனைக் குறித்துப் பிரமாதமான விவாதம் சென்னைப் பாராளுமன்றத்தில் நடைபெறுகின்றது. இந்து சமய தரும ஸ்தாபனங்களையெல்லாம் அரசினர் மேற்பார்வையில் கொண்டுவருவதே இதன் நோக்கம். இப்போது எத்தனையோ ஆலயங்கள் தரும ஸ்தாபனங்கள் நேரில் அரசினர் பரிபாலனத்தில் வந்துவிட்டன. ஆனுல் மடாதிபதிகளால் பரிபாலிக்கப்படும் ஆலயங்களும் மற்றைய ஸ்தாபனங்களும் இன்னும் அப்படியே இருந்துவருகின்றன. இம் மடாதிபதிகளுள் சிலர் திறமையாக இத் தருமங்களை நடாத்திவரினும் பொதுவாக அநேகர் தமது கடமைகளை ஏற்ற முறையிற் செய்யவில்லை என்பது உண்மை. இவர்களிலிருந்து இத தருமங்களை எடுத்து அரசினர் மேற்பார்வையில் நடக்கச்செய்யவே புதிய திட்டம் கொண்டுவரப்பட்டுளது. இதைக் குறித்து மிகப் பெலமான எதிர்ப்பு சென்னைப் பாராளுமன்றத்தில் தோன்றி அகோரமான விவாதம் நடக்கின்றது. அரசினர் இவ்விஷயத்தைச் சட்டமாக்குமுன் தீர ஆலோசித்தே செய்யவேண்டும். அவசியப்பட வேண்டியதில்லை.

#### ஹைதரபாத்

இச் சமஸ்தானத்திலுள்ள காங்கிரஸ் கட்சியினர்க்குள் பெரிய பிளவு ஏற்பட்டு மிக்க தீமையை விளைத்தது. இப்போது இவ்விரு சாரினரும் டில்லி சென்று சர்தார்படேல் முன்னிலையில் தமது பிணக்குகளை நீக்கிக்கொண்டனர் என்ற புதினம் யாவர்க்கும் மகிழ்ச்சியைத் தரவேண்டியது. இச் சமஸ்தானத்தின் பரிபாலனம் இராணுவ அதிகாரிகளின் கையிலேயே இருந்து வருகின்றது. சிற்சில இடங்களில் அபேதவாதிகளின் குழப்பங்களும் இடைவிடாது நிகழ்வதைக் காணலாம். பூரணமான சமாதானம் நிலைபெறும்வரையும் சாதாரண அரசாங்கம் ஏற்படுவது அசாத்தியம். அரசியலமைப்புச் சபை நிறுவப்பெற்று இடைக்கால அரசாங்கம் ஏற்படும்வரையும் இந்நிலையில் இருக்கவேண்டியதே. நிஸாம் மன்னர் குடும்பத்துக்கு இதுவரையும் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாக சம்பளம் கொடுக்கப்பட்டுவந்தது. இனி அவர்கட்கு மொத்தமாகத் தாபரிப்புப் பணம் வழங்கப்படும். இவரின் ஆஸ்திகள் யாவும் பொதுப் பணமாக அரசாங்கக் கணக்கிற் சேர்க்கப்படும. பிற நாடுகளில் நிஸாம் மன்னர்க்குரிய பணமும் அரசாங்கப் பணமாகவே மதிக்கப்படும். இச் சமஸ்தான மக்கட்கு இனித்தான் உண்மையான நற்காலம் பிறக்கின்றதெனக் கூறினுந் தகும்.



## நமது வாசிகசாலை

1. தியானமும் வாழ்க்கை நலமும்: விலை: அணா 8. 2. கடவுளும் வாழ்க்கைநலமும் விலை: ரூ. 1; 3. உலக நன்மையே ஒருவன் வாழ்வு விலை: ரூ: 1; 4. மக்கள் வாழ்க்கைத் தத்துவம் விலை: ரூ. 1-4-0; 5. வாழ்க்கை யின்பம் விலை: ரூ. 1-4-0.

இந்நூல்களின் ஆசிரியர்: கா. சுப்பிரமணியப்பிள்ளை, எம். ஏ., எம் எல். பிரசுரம்: உமா தேவன் கம்பெனி, 16, செம்புதாஸ் தெரு, சென்னை 1.

அறிவுச் சுடர் என்ற நூல்வரிசையின் முதல் 5 நூல்களும் வெளியாகியுள்ளன. இந்நூல் வரிசையின் ஆசிரியரை அறியாதார் தமிழ் நாட்டில் இல்லையெனலாம். ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனும், தமிழ் வளமும், அவரின் நூல்களைப் படிப்பார்க்கு நன்கு புலனாகும். பல நூற்பயிற்சியினதும், நிரம்பிய அநுபவத்தினதும் பேறாக வந்த இந்நூல்கள் அறிஞர் உலகுக்கு நல்விருந்தாகும்; சொல்வளனும் பொருட் பொதிவும் ஒருங்கமைந்த தூய தமிழ் நடையில் இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அநாவசியமான, பொருளமை வற்ற எப்பகுதியையாவது இந்நூல்களிற் காண்பதரிது. சிறு சிறு வசனங்களாய் வாசிப்போர்க்குத் தெளிவையும் இனிமையையுங் கொடுத்துச் சிறப்பிக்கின்றன.

1. தியானமும் வாழ்க்கை நலமும்: இச்சிறு நூலில் பிள்ளையார் முருகன் சிவன் சக்தி சரஸ்வதி என்ற தெய்வங்களின் தத்துவ உண்மையும் அவ்வவ் வழிபாட்டு முறைகளும் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரார்த்தனைப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

2. கடவுளும் வாழ்க்கை நலமும்: இதில் கடவுளின் ஒப்புயர் வில்லாத் தெய்வத் தன்மைகள் விளக்கப்படுகின்றன. அவ்வப்போது கடவுளைத் தியானிக்கும் நினைப்பு முறையாக எழுதப்பட்ட பகுதிகள் பக்தி யுணர்ச்சியிற் றோய்ந்த வசனப் பிரார்த்தனைகளாக அமைந்து உண்மை உயிர்ப்புடன் விளங்குகின்றன.

3. உலக நன்மையே ஒருவன் வாழ்வு: இதில் அன்பு வாழ்க்கை, உலக வாழ்க்கை யினியல்பு தெய்விக வாழ்க்கை, ஒற்றுமை வாழ்க்கை என்ற விடயங்கள் சிறந்த வகையில் விளக்கப்பட்டிருத்தல் வாசிப்போர்க்கின்பமளிப்பனவாகும்.

4. மக்கள் வாழ்க்கைத் தத்துவம்: இதில் நமதுயிர்நிலை, மெய்யென்பது யாது, மக்களின் பெருங்கடமையாது, அன்பின் சிறப்பு, அறிவு பெறுதல், ஆற்றல் வளம், சாந்தநிலை, செல்வவளம், முதலிய கட்டுரைகள் தக்கவகையில் வரையப்பட்டுள்ளன.

5. வாழ்க்கை யின்பம்: மனிதன் இன்பமாக வாழ்வதற்கு ஒவ்வொருவரும் அறிந்து கைக்கொள்ளவேண்டிய சுகசீவிய வழிகள் விளக்கப்படுகின்றன. மேல்நாட்டு வைத்தியர்களின் அபிப்பிராயங்களைக் கொண்டும் தமது அநுபவ ஆற்றலைக் கொண்டும அநேக விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. மனிதன் விரைவில் முதுமைத் தன்மையை யடையாமல் உயிராற்றல் மிகுதிப்பட்டு இளமை பெறவும் பெண்மக்கள் ஆண் மக்களைவிட ஆற்றலிற் குறைந்தவர்களல்ல என்றும் ஆசிரியர் காட்டுவன குறிப்பிடத் தக்கன

நா. க.

## வெளியில் எதிர்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட மறக்கவில்லை. இலங்கையிலுள்ள புகைவண்டிகளை ஆதரிப்பவர்கள் இவற்றையெல்லாம் ஆமோதிப்பார்கள் என்பதற்கு ஆட்சேபமில்லை.

### இரு விமானங்கள்

ஆகாயவிமானப் போக்குவரத்து இலங்கையில் வெகு துரிதமாக முன்னேறி வருகின்றது. திங்கட்கிழமை பிற்பகல் மேலும் இரு புதிய விமானங்களுக்குப் பிரதம தேசாதிபதி சேர் மூர் அவர்களும், பிரதமர் சேனநாயகாவும் முறையே **லக்ஸபானு, இரத்மலானு** என்ற பெயர்களைச சூட்டி அவ்விமானங்களை ஆசீர்வதித்திருக்கின்றனர்.

திங்கட்கிழமை இரவு இரத்மலானையிலிருந்து கிளம்பிய விமானம் சிங்கப்பூரைச் சேர்ந்தபோது அங்கு பிரயாணிகளை ஏற்றிச்செல்ல மலாயா உள்நாட்டுவிமானப்பகுதியினர்மறுத்துவிட்டனர். இவ்விமானத்தில் அவுஸ்திரேலியாவுக்கெனப் பன்னிரண்டு பிரயாணிகள் சென்றனர். சிங்கப்பூரில் இறங்குவதற்கு முன்னதாகவே உரிமை பெறாத காரணத்தினுல் இத்தடை உண்டாயிற்றெனக் கூறப்படுகின்றது.

### புதிய அனுராதபுரம்

அனுராதபுரத்தில் அமைக்கப்பெறும் புதிய நகரைப் பிரதமர் சேனநாயகா ஞாயிற்றுக்கிழமை (13-2-49) திறந்து வைப்பார். அதுசம்பந்தமான சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. மந்திரி பண்டாரநாயகாவும், அவருடைய சிங்கள மகாசபையைச் சேர்ந்த சகாக்களும் ஏற்கனவே அனுராதபுரத்துக்கு விஜயம்செய்து திறப்பு விழாவுக்கான ஒழுங்குகளை மேற்பார்வையிட்டனர்.

நகரின் வாயலில் நிறுவப்பட்டுள்ள 20 அடி உயரமுள்ள சிம்மத்தூணை பிரதமர் பிற்பகல் 4—55 மணிக்குப் பௌத்தமதச் சீர்சிறப்புகளுடன் திறந்து வைப்பார். 1956-ம் ஆண்டில் நகர அமைப்புப் பூர்த்தியாகுமெனத் தெரிகின்றது. அவ்வாண்டிலேயே போதிமுனிவரின் 2,500 வது ஆண்டு ஜெயந்தி விழாவும் கொண்டாடப்படும். ஐரோப்பாவிலும் கீழைத் தேசங்களிலுமுள்ள பௌத்தர்களின் பிரதிநிதிகள் அவ்வாண்டில் அனுராதபுரத்திற் கூடி இவ்விழாவிற் பங்குபற்றுவார்கள்.

### 3,000 ஏக்கர்

இப்புதிய நகரம் 3,000 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படுகின்றது. 15,000 மக்கள் வரை இங்கு சௌகரியமாக வசிக்கக் கூடியதாக இருக்கும். குடியிருப்பு, வியாபார நிலையங்கள், தொழிற்சாலைகள், அரசாங்கக் காரியாலயங்கள்: பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுக்கான கோயில்கள், வைத்தியசாலைகள் ஆதியாம் பல ஸ்தாபனங்களுக்கும்இடங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. புதிய நகர அமைப்பு வேலைகள் முடிவுறும்போது புராதன நகரைப் பாதுகாப்பதற்கான பல வேலைகளும் பூர்த்தியாகிவிடும். அத்துடன் பழைய கட்டடங்களும் திருத்தி அமைக்கப்படும்.

### புதிய நியமனங்கள்

ஸ்ரீ வி. ஸி. ஜயசூரியா, ஸ்தலஸ்தாபன அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஸி. ஸி. எஸ். பரீட்சைக்குப் பிரவேசம் செய்யாத ஒரு பட்டதாரியாவார். இவர் 1938-ல் உதவி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

நீதிப்பகுதி மந்திரி காரியாலயத்திற் நிரந்தரக் காரியதரிசியாகக் கடமையாற்றிய ஸ்ரீ ஈ.ஏச். டி.குணசேகரா அடுத்த மாதம் 1-ந் திகதியிலிருந்து உயர்தர நீதிமன்ற நீதியரசாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருமணம்

### இராஜகோபாலன் — பத்மஜானகி

ஸ்ரீ. வி. பங்காருசுவாமிகளின் புத்திரி செல்வி **பத்மஜானகி** அம்மாளுக்கும் ஸ்ரீ எஸ். வெஙகட்டரஙகம் அவர்களின் புத்திரன் செல்வன் **இராஜகோபாலன்** அவர்களுக்கும் சென்னை, திருவல்லிக்கேணியிலுள்ள 'சேஷ நிலையம்' என்ற இல்லத்திற் சென்ற புதன்கிழமை (9-2-49) திருமணம் சிறப்பாக நடந்தேறியது. புதுமணத் தம்பதிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

அன்று பிற்பகல் கான சரஸ்வதி டி. கே. பட்டம்மாள் அவர்களின் இசைக்கச்சேரியும் நடைபெற்றது. மணமகள் ஸ்ரீமான்கள் வி. வி. சுந்தரராஜன்; வி. வி. சடகோபன் சகோதரர்களின் மருகியாவார்.

## பறப்பாங்கண்டல் கிராம முன்னேற்றச் சங்கம்

மன்னார்ப் பகுதி உதவி மாகாண அதிபர் சமீபத்திற் பறப்பாங்கண்டல் கிராம முன்னேற்றச் சங்கத்தை ஸ்தாபித்து வைத்தார். அத்துடன் மாதர் சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. பிரமுகர்கள் சொற்பொழிவாற்றினர். இதன் பின்னர் அர்ச் மேரி வாசிகசாலை திறந்துவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைக்காரர் சூழ்ச்சிகள்

## பொலிசார் முயற்சி

குதிரைப் பந்தயச் சங்கத்துக்குரிய 4 இலட்சம் ரூபாயைக் கொள்ளையடித்துக்கொண்டு காரிலே பறந்து சென்ற கோஷ்டியினர் அமர்த்திய மோட்டார் வண்டியின் சாரதியான யோன் சில்வாவின் பிரேதம் அழுகிப் போன நிலைமையிற் புத்தளம்—அநுராதபுரம் வீதிக்குச் சமீபமாகவுள்ள பயங்கரமான காட்டின் மத்தியிலே கண்டெடுக்கப்பட்டது.

குறித்த சில்வா என்பவரின் பிரேதம் சிலுவையில் அறையப்பட்ட மாதிரி இரு கரங்களும் இரு மரங்களிற கட்டப்பட்டிருந்தன. பேய்களும் அச்சமுறும் இக்கானகதின் மத்தியிலே இப்பிரேதத்தை ஒரு கோஷ்டியினர் காவல் செய்தனர். பிரேத சோதனை நடந்த பிற்பாடு அதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒரு மணற்றிடர் மீது சில்வாவின் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது.

சென்ற மாதம் 31-ந் திகதி பொலிஸாருக்கு அனுப்பப்பெற்ற அனுமதேயக் கடிதத்தில் ஜோன் சில்வா புத்தளம்—அநுராதபுரம் வீதியில் 13/4 இலக்கமுள்ள மதகுக்குச் சமீபத்திற் கட்டுண்டு கிடப்பதாகக் குறிப்பிட்டிருந்தது.

இக் கொள்ளை சம்பந்தமாகக் பிரதம பொலிஸ் அதிகாரி சேர் றிச்சாட் அலுவிகார பிரதி தினமும் ஆக வேண்டிய மகாநாடுகளைக் கூட்டித் தமது உத்தியோகஸ்தருடன் ஆலோசனை செய்து வருகின்றார். இது விஷயத்திற் பொதுமக்களின் உதவியையும் பொலிஸார் பெரிதும் வேண்டி நிற்கின்றனர். இக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் மூளைப்பலம் மிகுந்தவர்களாகையால் அகப்படும் சகல விபரங்களையும் பொலிஸார் நுணுக்கமாகவே ஆராய்ந்து வருகின்றனர்.

இத்திருட்டிற் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தலைவர்களாக வழிகாட்டியவர்கள் பிரசித்தி வாய்ந்த குற்றவாளிகள் எனக் கருதப்படுகின்றது.

இப்போது இக் கொள்ளை சம்பந்தமாக நூற்றுக் கணக்கான அனுமதேயக் கடிதங்கள் பிரதிதினமும் வந்துகுவிந்துகொண்டிருக்கின்றனவாகப் பொலிஸ் அதிகாரிகளில் ஒருவரான டி'சில்வா கூறியதாகத் தெரிகின்றது.

ரூ. 20,000 சன்மானமாகக் கொடுக்கப்படுமென்ற தொகை பொது மக்களுக்கே உரியதெனவும் பொலிஸாருக்குரியதன்றெனவும் சேர் றிச்சாட் நன்கு விளக்கியுள்ளார்.

கொழும்பிலே பலவழிகளாலும் நுழையும் மோட்டோர் வண்டிகளின் இலக்கங்களையும் வெளியே செல்லும் வண்டிகளின் இலக்கங்களையும் பொலிஸார் குறித்துவிடுகின்றனர்:

---

காந்திஜி கொலைவிசாரணைத் தீர்ப்பு

# இருவருக்கு மரண தண்டனை

## ஐவருக்குச் சதாகாலச் சிறை

மகாத்மா காந்தியைப் படுகொலை செய்தவரான **நாதுராம் விநாயக கொட்சேக்கும்**, காந்திஜீ படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்த குற்றத்திற்காக மற்றொரு எதிரியான நாராயண ஆப்தேக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

விஷ்ணுகார்கரே, மதன்லால், ஷங்கர் கிஸ்தியா, கோபால் கொட்ஸே (நாதுராம் விநாயக கொட்ஸேயின் சகோதரர்), டாக்டர் தாத்திரேய சதாசிவபர்சூரி ஆகியோருக்கு சதாகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

விநாயக் தாமோதர சவர்க்கார் குற்றவாளி அல்லவெனத் தீர்மானிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

காந்திஜி கொலைவழக்கு விசேஷ நீதிபதி திரு. ஆத்மசாரன் தீர்ப்புக் கூறுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பதாகவே டில்லியிலும் இந்தியாவிலுமுள்ள முக்கியமான நகர்களிலும் பலத்த பொலீஸ் பந்தோபஸ்துக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்கு நடைபெற்று வந்த செங்கோட்டைக்குள் செல்வதற்கு வழக்கம்போல் அனுமதிச் சீட்டுகள் வைத்திருந்தவர்களே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனாலும் யாவரும் இன்று கடுமையாகச் சோதனையிடப்பட்டனர்.

* * *

1948 ஜனவரி 30-ல் காந்திஜியைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 36 வயதான ஹிந்து நாதுராம் விநாயககொட்சேயும் மற்றும் எழுதீவிரவாதிகள் மீதும் தொடரப்பட்ட வழக்கு விசாரணை ஆறுமாதங்கள் நடைபெற்ற பிறகு கடந்த டிசம்பர் 30-ல் முடிவுற்றது.

கொலைக்குற்றம் தவிர, சதிசெய்ததாகவும், ஆயுதங்களைச் சட்டவிரோதமாக வைத்திருந்ததாகவும் குற்றஞ் சாட்டி மேற்கூறிய எட்டு எதிரிகள்மீதும் நடவடிக்கைகள் ஒரு விசேஷ நீதிபதி முன்னிலையில் கடந்த மே 27-ல் ஆரம்பமாயிற்று.

மகாத்மா காந்தியைக் கொன்ற குண்டுகளைத் தாமே சுட்டதாகக் கடந்த நவம்பர் 8-ல் நாதுராம் கொட்சே கோர்ட்டில் ஒப்புக்கொண்டார்.

இந்தவழக்கில், எதிரிகளுள் ஒருவராயிருந்து அரசாங்கச் சாட்சியாக மாறிய திகம்ப பாட்கே, மன்னிப்பளிக்கப்பட்டதின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

தீர்ப்புக் கூறப்பட்டபின் தண்டிக்கப்பட்டவர்கள் கைதிக் கூண்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்படுகையில், நாதுராம் கொட்சே, நாராயணஆப்தே, விஷ்ணுகார் கரே, மதனலால் ஆகியோர் தங்கள் கைகளை உயர்த்திக்கொண்டு "ஹிந்து தர்மத்திற்கு ஜேய்" "பிரிவினையற்ற பாரதநாடு நீடூழிவாழ்க" என்று கோஷங்களை ஆரவாரஞ் செய்தனர்.

---

### சாவகச்சேரியில்

சென்ற செவ்வாய்க்கிழமையன்று தபாற்பகுதிப் பிரதம அதிகாரி சாவகச்சேரிக்கு விஜயஞ்செய்தபோது அவருக்குச் சாவகச்சேரி வாடிவீட்டில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. பட்டின சங்கத் தலைவர் ஸ்ரீ எஸ். கே. திரவியநாயகம், ஸ்ரீ வி. குமாரசுவாமி எம். பி. அவர்களும அவரை வரவேற்றனர்.

---

# காந்திஜியின் மறைவு

## யாழ்பாணத்துக்கு மகிழ்ச்சியா?

காந்திஜி சரியான காரியங்களையே சாதித்தார். அதற்காக அவர் சரியான முறைகளையுமே கையாண்டார் என நியாயவாதி எஸ். ஏச். பேரின்பநாயகம் அவர்கள் மானிப்பாய் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் மெமோறியல் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற காந்திஜி சிரார்த்ததினக் கொண்டாட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார். அரசியல் வாதிகள் தாங்கள் கையாளும் முறைகள் சரியானவையோ என்பதைப்பற்றி அக்கறை எடுப்பதேயில்லை. ஆனால் காந்திஜி நேரிய வழிகளைப் பின்பற்றியே தனது காரியங்களை நிறைவேற்றி வந்தார் என அவர் மீண்டும் தமது தலைமையுரையில் அழுத்திப் பேசினார்.

சென்ற பொதுத்தேர்தலிற் குடிவகைகளும் பணமுங் கொடுத்து வாக்குகளைப் பெற்ற சில அரசியல் வாதிகள், காந்திஜியின் சிரார்த்த தினத்தில் ஈடுபட்டுவரும் வேடிக்கையை ஈழகேசரிப் பத்திராதிபர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்கள் எடுத்துக்காட்டினார். பழிப்புக்கிடமாகி வந்த இந்திய மக்களின் கௌரவத்தைக் காந்திஜியே உயர்த்திவைத்தார் என டொக்டர் கே. சுதிமவேலு அவர்கள் குறிப்பிட்டார்.

"காந்திஜியின் போதனைகள் அனைத்துக்கும் மாறாகவே யாழ்ப்பாண மக்கள் நடந்துவந்தனர். காந்திஜி வகுப்புவாதத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்காகப் படாதபாடு பட்டார். யாழ்ப்பாணத்தவர்கள் வகுப்புவாதத்தை உணவூட்டி வளர்த்தார்கள். ஆகவே, காந்திஜியின் மறைவு யாழ்ப்பாணத்தவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விஷயமாகவே இருக்கும். இது காரணமாக அவர்கள் அன்னாரின் சிரார்த்த தினத்தைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமான தொன்றே" என நியாயவாதி எம். பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

செல்வி, எஸ். என். சரஸ்வதி இசைக்கச்சேரியும் நடைபெற்றது. அத்தினத்துக்கென விசேஷமாக இயற்றப்பட்ட பாடல்களை அவர் உருக்கமாகப் பாடினார்.

---

# குப்பை நிறைந்த நகரம்

### உதவி அதிகாரியின் வர்ணனை

புதிய அந்தஸ்தை யடைந்துள்ள யாழ்ப்பாணப் பட்டினமானது வட இலங்கைக்கே பெருமை அளிக்கக் கூடிய ஒரு நாகரீக நகரமாக மாறியிருக்குமென்று எதிர்பார்ப்பவர்கள், இந் நகரமானது இன்று ஜனத்தொகையிற் பெருகியிருப்பதைத் தவிர, வேறு எந்தவிதத்திலும் முன்னேற்றம் அடையாதிருப்பதைக் கண்டு ஏமாறுவார்கள் என ஸ்தலஸ்தாபன உதவி அதிகாரி ஸ்ரீ ஸி. சூரியகுமாரன், அவருக்கு அளிக்கப்பெற்ற பிரியாவிடை விருந்துவைபவத்திற் பேசும் போது குறிப்பிட்டார்.

கொழும்புக்கு மாறிச் செல்லும் இந்த உத்தியோகஸ்தருக்கு அவருடைய நண்பர்கள் யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலே ஒரு விருந்தளித்துக் கௌரவித்தனர். ஸ்ரீ சூரியகுமாரன் தொடர்ந்து பேசியதாவது: யாழ்ப்பாணம் குப்பை கூளம் நிறைந்த நகரமாகத் தோன்றுவதுடன் அவலட்சணமுள்ளதாகவும் காட்சியளிக்கின்றது. வீதியெங்கும் ஒரே தூசிதான். கவனிப்பாரற்ற தெரு. மாடுகள் கணக்கு வழக்கின்றிச் சுற்றித் திரிவதைப் பார்ப்பவர்கள் யாழ்ப்பாண நகரத்தை ஒரு மாட்டுத் தொழுவமெனவே எண்ணுவார்கள். இந்த நகரைச் சிறந்த முறையில் நிர்மாணிக்கத் திட்டமிடுபவர்கள் தாமும் அம்முயற்சி பயங்கரமான தொன்றெனவே நினைந்து அஞ்சுவார்கள்.

---

# யாழ்ப்பாணமும் மின்சாரமும்

### கமக்காரர்களுக்கு உதவி

காங்கேசனதுறை சிமேந்துத் தொழிற்சாலையிலிருந்து யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்தல் வேண்டுமென்ற யோசனையைத் தொடர்ந்து, அயற்கிராமங்களிலுள்ளவர்களும் விவசாயத்துக்கும் மின்சாரச்க்தியைப் பயன்படுத்த விரும்பி அதற்காகக்கிளர்ச்சிசெய்தனர்.

ஆகவே, யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள கூட்டுறவு அன்பர்கள் சென்ற சனிக்கிழமை (5-2-48) சுன்னாகத்திலுள்ள விளைபொருட் சங்கக் காரியாலயத்திற் கூடி இதுபற்றி ஆலோசித்தனர். யாழ்ப்பாணம ஐக்கிய மின்சார விநியோகச் சங்கம் என்ற சங்கத்தையும் நிறுவினர். மின்சாரத்தை யாழ்ப்பாணப்பகுதிகளிலுள்ள கமக்காரர்களுக்கு விநியோகிப்பதற்கான யந்திர சாதனங்களை விலைக்கு வாங்கி அமைப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும். விவசாயமே யாழ்ப்பாணத்தின் முதுகெலும்பாகையால் இத்தகைய ஒழுங்கு விவசாய வளர்ச்சிக்கும் தொழிற் பெருக்கத்துக்கும் பேருதவியாக விருக்குமெனக் கருதப்படுகின்றது.

இவ் விருந்து வைபவத்துக்கு யாழ்ப்பாணத்து மேயர் சாம் சபாபதி அவர்கள் தலைமை வகித்தார்கள். யாழ்ப்பாணப்பகுதிப்பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் சிலர் உட்பட வேறும் பல பிரமுகர்கள் இவ்வைபவத்திற் கலந்துகொண்டனர்.

---

### கரவெட்டி வடக்கு கிராம முன்னேற்ற சங்கம்

சென்ற வெள்ளிக்கிழமை (4-2-49) காலை வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. நா. வேதாரணியசேயோன் அவர்கள் ஷை சங்கச் சமூக நிலையத்தை வதிரிச் சந்திக்கு மேற்கே உடுப்பிட்டித் தெருவிற்கருகாமையிலுள்ள சுகாதார நிலையத்தில் ஆரம்பித்துவைத்தார். அத்தருணம் ஷை சங்க அக்கிராசனர் திரு. வை. விஜயரத்தினமவர்கள் தலைமையில் நடந்த பகிரங்கக் கூட்டத்தில் ஷை காரியாதிகாரியவர்களும், பொலிஸ் உதவிப் பரிசோதகர் திரு. செறிப்தீன் அவர்களும், கிராம முன்னேற்ற உத்தியோகத்தர் திரு. மு. பராசசிங்கம் அவர்களும் சொற்பொழிவுகளாற்றினர். பல பிரமுகர்களும் கிராம வாசிகளும் சமுகமளித்தனர்

---

# கவிஞரின் சேவை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலரே. நாம் கவிகளையும் கவிஞர்களையும் போற்றுவதுடன், அவர்கள் இயற்றிய பாட்டுக்களைப் படித்து இன்புறவேண்டும். காவியம், ஓவியம், சித்திரம் போன்றவைகள் கவிதையின் ஓர்பாகம். கவிகள் உணர்ச்சியையும் எண்ணத்தையும் கவிதைகள்மூலம் வெளியிடுகிறார்கள். ஸ்ரீ பிள்ளையின் கவிதைகள் தேசியத்தை ஒட்டியன. தேச விடுதலையில் அவருக்கு ஆர்வம் உண்டு. பாரதியார் காணாத சுதந்திர சூரியனை ஸ்ரீ பிள்ளை கண்டுகொண்டார். ஸ்ரீ பிள்ளை கவிகளை எழுதுவதில் மட்டும் பாண்டித்தியம் பெறவில்லை. நல்ல வசனங்களைஎழுதுவதிலும்திறமையுள்ளவர். வீரமாமுனிவர் இயற்றியுள்ள சிலஇனியவசனங்களை யாவரும் படிக்கவேண்டும். வசனநடையில் விஷயங்களை விளக்கவேண்டும் என்ற எண்ணம் சென்ற 50, 60 ஆண்டுகளாகத்தான் தோன்றியுள்ளது.

---

# வண்ணாத்திப் பூச்சி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் கண்ணை மறைத்தால் அதனல் பறக்க முடியாது என்பதையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் கண்ணை மறைப்பதற்குக் 'கொலேடியன்' என்னும் ஒருவித பசையைத் தடவிவிட்டால் அது பறக்க முடியாமல் தத்தளித்துக் கீழே விழுந்துவிடும். இப் பசையில் வர்ணங்களைக் கலந்துபூசி, வர்ணங்களை உணரும்தன்மை உண்டா இல்லையா வென்பதையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளார்கள்.


இவ்விதமான பல வித உண்மைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருந்தாலும், அதற்கு வண்ணாத்திப்பூச்சி என்னும் பெயர் எப்படி ஏற்பட்டது என்பதுதான் தெரியவில்லை. வண்ணாத்திக்கும் இப்பூச்சிக்கும் என்ன சம்பந்தமோ? ஆங்கிலத்திலே (பட்டர்விளை) என்று சொல்லுகின்றனர் வெண்ணெய்க்கும் அதற்கும் என்ன உறவு? இது விசித்திரமாக இருக்கின்றதல்லவா?

---

### உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை

ஷை பாடசாலையின் 5 ம் வகுப்பு மாணவர் ஒன்பதின்மர் சென்ற 1948 ம் ஆண்டு வித்தியாபகுதியார் நடத்திய வெகுமதிப் பரீட்சைக்குத் தோற்றி, அவருள் எழுவர் தெரியப்பட்டுளர். இப்படியே சென்ற ஐந்து ஆண்டுகளாக இப்பாடசாலை, அரசினர் மத்திய பாடசாலைகளிற் படிப்பதற்குத் திறமையானமாணவர்களை அனுப்பிவருகிறது. அயற்கிராமவாசிகளுந் தங்கள் பிள்ளைகளை இங்கு 5 ம் வகுப்பிற் படிப்பதற்கு அனுப்பி வருகின்றனர். இதனல் இடவசதி போதியதாயில்லை. ஆதலின் புதுக்கட்டிடம் அமைக்க வேண்டியிருத்தலின் சைவாபிமானிகள யாவரும் தங்களாலியன்றபொருளுதவி புரியுமாறு வித்தியாதரிசியின் தலைமை ஆசிரியர் வேண்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருமக்களே!

வணக்கம், சென்றவாரம் உங்களுக்குக் கொடுத்த சுதந்திரப் போட்டியில் 250. மருமக்கள்தான் பங்கு பற்றலாம என்று எழுதியது தவறு. இப்பொழுது மருமக்களாயிருக்கும், 257 பேர்களும் தாராளமாகச் சுதந்திரப் போட்டியிற் பங்கு பற்றலாம. வணக்கம.

கேசரிமாமா

## மாமா பதில்

நா. கருணவதி, மே.250: உம்மை என மருமகளாக்கியிருக்கிறேன். உமது கட்டுரை கிடைத்தது.

க. கந்தசாமி, மே.251: உம்மையும் பாலர்பகுதியிற் சேர்த்திருக்கிறேன.

ஐ. பாலசுப்பிரமணியம், மே.252: நீரும் என் மருமகன் தானே.

தொ. செபமாலை, மே.253: உம்மை என் மருமகனக சேர்த்துக்கொண்டேன்.

இ. ஐயாத்துரை, மே.254: உம்மை என் மருமகனுக்கிக் கொண்டேன். 20 வயது வரையும் பாலர் பகுயில் அங்கத்தவனுகவிருக்கலாமே.

பொ. ஸ்ரீபார்வதி, கி.255: உம்மையும் என் மருமகளாக்கியிருக்கிறேன்.

பூ. சதாசிவரத்தினம், மே.256: உம்மை என் மருமகனுக்கியிருக்கிறேன். உமது கவிதை கிடைத்தது. பிரசுரம் பெறுவதற்குத் தகுந்தது அல்ல மருமகனே!

சி. சரவணபவன், மே 257: உம்மை என் மருமகனுக்கியிருக்கிறேன். சுதந்திரப் போட்டியில் நன்ருகப் பங்குபற்றலாம். சென்றவாரம் தவருக எழுதிவிட்டேன் 257 மருமக்களும் பங்கு பற்றலாம். சிவராத்திரியிலன்று பேசுவதற்கு என்னுடைய தள்ளாத வயது இடங்கொடுக்காது மருமகனே!

இ. புவனேஸ்வரியம்மாள், மே.163. அவர்களுடைய சங்க வெளியீடொன்றில் பிரசுரிப்பதற்காக ஒரு கட்டுரை பாலரும் பத்திரிகையும் என்ற தலைப்பில் எழுதியனுப்பியிருந்தேன். மே.9. அல்வாய்த் தணிகாசலம் சில பத்திரிகைகளைத் தவற விட்டு விட்டார்தான். ஆனல் அவர் தாம் அறிந்த பத்திரிகைகளைத் தானே பாடியிருக்கிருர். அதனுல் அவரில் தவறொன்றுமில்லையே. கட்டுரை கிடைத்தது.

இ. மகேஸ்வரசர்மா, கி.164: 5-ம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்தது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. உங்கள் விலாசத்தை மாற்றத் தானே வேண்டும்.

செ. பரமநாதன், மே.202. "நாம் பின்பற்றவேண்டியவை" நன்ருயிருக்கிறது.

# நிலா உலாத்து

கமலாவதி சபாரத்தினம், மே.123

அன்று பௌர்ணமி. நிர்மலமான வெளியில் பூரணசந்திரன், தனது கிரணங்களை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்தான். பொன் உருண்டை போன்ற பூரணசந்திரன் இராணியைப்போல் நடுவில் வீற்றிருக்கச் சுற்றவர தோழிகள்போல் நட்சத்திரங்கள் இருந்தன.

மோகனுவும் நானும் வெளித் திண்ணையில் இருக்கும் கட்டிலில் இருந்தோம். எங்கும் நிசப்தம்.

பத்துமணி என்று கடிகாரத்தால் அறிந்தோம். "மோகனு இன்று இச்சந்தோஷமான நேரத்தில் நிலாவுலாத்துக்கு வருகிருயா?" என்று கேட்டேன். மோகனு சம்மதிக்க இருவரும் நிலைக்கண்ணுடியின் முன்நின்று அலங்கரித்துக்கொண்டு போனேம்.

கடற்கரையை அடைந்து, அங்கு இருக்கும் ஒரு வெள்ளைக் கற்பாறைமீது உட்கார்ந்து ஒன்றன் பின் ஒன்ருக வரும் அலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தோம். அவ்வின்பக்காட்சியைக் கண்டு மகிழ்ந்துவிட்டு இருவரும் அவ்விடத்தைவிட்டுச் சென்ரேம்.

இருவரும் ஒரு பூஞ்சோலையையடைந்தோம். எல்லாச் செடிகளும் மரங்களும் எங்களை வரவேற்றன. ஆ! என்ன வரவேற்பு? எல்லாம் இயற்கை வரவேற்புத்தான். அங்குள்ள நதியின் கரையில் இருக்கும் மணலில் உட்கார்ந்தோம். அங்கு சிறுவர்களும், பெண்களும், ஆண்களும் பொழுதைப் போக்குவதற்காக வந்து சந்தோஷமாய்க் கூச்சலிட்டுக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள். ஒரு பாட்டுப் படிக்கும்படி என்னைக் கேட்டாள் மோகனு. நான் "பூரண சந்திரனும் தென்றலும்......" என்னும் இராகமாலிகைப் பாட்டைப் படித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் பொழுது ஏதோ ஒரு இனிமையான குரல் கேட்க நான் பாட்டை நிறுத்திவிட்டு யோசனையில் ஆழ்ந்தேன். மோகனு திடுக்குற்ருள். "ஏன் அக்குரல் கேட்டதும் இப்படி இருக்கிருய்?" என்று கேட்டாள். நான் "அது பெரிய கதை" என்று சொன்னேன். அவள் என்னைச் சொல்லும்படி கேட்டாள். நான சொல்லத் தொடங்கினேன்:—

"அப்போது எனக்கு ஒன்பது வயது இருக்கும். என் இணை பிரியாத சினேகிதி வனஜாவும் நானும் ஒரே வகுப்பிற் படித்துக்கொண்டுஇருந்தோம். நான் என்ன செய்தாலும் அவளும் அதையே செய்வாள். அவளை எங்கு காண்கிருர்களோ அங்கு என்னையும் பார்க்கலாம்.

எனது பிறந்ததினம் வந்தது. வீட்டிற் பெரிய விருந்து வைத்தோம். மாலை நாலுமணியளவில் எங்கள் வாசலில் ஒரு மோட்டார்வண்டி வந்துநின்றது. நான் ஜன்னல் வழியாகப் எட்டிப்பார்த்தேன். வனஜா வந்துகொண்டிருந்தாள். என் சந்தோஷத்துக்கு எல்லையில்லை. நான் அவளை அழைத்துக் கொண்டுபோய்ச் சிற்றுண்டிகளெல்லாம் பரிமாறினேன். அவள் எனக்கு உபகாரமாய்த் தந்த புதுச் சட்டையை அணிந்துகொண்டு உலாத்துக்கு வரும்படி சொன்னுள்.

நாங்கள் இருவரும் சென்ரேம். ஒரு பூந்தோட்டத்தையடைந்தோம். அங்கு இருக்கும் ஒரு ஆசனத்தில் அமர்ந்தோம். இருவரும் அங்கு இருக்கும் புஷ்பங்களைப் பிடுங்கி விளையாடிக்கொண்டு இருக்கும்பொழுது கதிரவன் தனது பிரகாசத்தைக் குறைத்துக்கொண்டு ஆறுதல் எடுப்பதற்காக மறைந்தான். சந்திரன் ஆகாயத்தில் இருக்கும் நீலமாகிய கடலில் ஒரு கப்பல் போல் உதித்தான்.

நாங்கள் வீடு திரும்பினேம். அவள் 'நாளைக்காலை வருகிறேன்' என்று சொல்லி விட்டுப் போனுள். அடுத்த நாள்காலை அவள் வரவில்லை. அவர்கள் வீட்டிலிருக்கும் வேலைக்காரியிடம் விசாரிக்க அவள், 'இராத்திரி எல்லோரும் எங்கேயோ போய்விட்டார்கள்', என்று சொன்னுள்.

ஏழு வருஷம் ஆகிறது. வனஜாவை இன்னும் காணவில்லை. அப்பொழுது கேட்ட குரல் அவளுடையதாய் இருக்கலாம் என்றுதான் யோசித்தேன்" என்று சொன்னேன்.

"அப்பொழுது சொல்லி இருந்தாற் போய்ப்பார்த்திருக்கலாம். இப்போது அவர்கள் போயிருப்பார்கள். நாழியாகிவிட்டது வா வீடு செல்லுவோம்" என்ருள் மோகனு.

நாங்கள் இருவரும் வீடு சேர்ந்தோம்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

13-2-49—19-2-49

மே.75. செ. நாகேஸ்வரி; கி.168: அ. பாலசுப்பிரமணியம்; கி.207. வை. சிவகாமசௌந்தரி.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

# கம்பர்

பொ. காராளசிங்கம். கி.199

இவர் சோழநாட்டிலே திருவழுந்தூரில் உவச்சசாதியில் ஆதித்தன் என்பவரது புதல்வராகத் தோன்றினுர். இளமைப்பருவத்திலேயே பெற்ருேரை இழந்து விட்டார். பின்பு இவரைத்திருவெண்ணைநல்லூர்சடையப்ப வள்ளல் ஆதரித்து வந்தார். இவர் செய்த நன்றியைக்கம்பர்தான் சுடுகாடு செல்லுமட்டும் மறக்கவில்லை. கம்பர் இராமாயணத்தை பெரும்பான்மை திருவெண்ணைநல்லூரிலும் சிறுபான்மை திருவெற்றியூரிலும் வைத்துப் பாடினுர். இந்நூல் ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றப் பட்டது.

இவர் காலத்தைச்சிலர் ஒன்பதாம் நூற்ருண்டென்றும், சிலர் பதினெராம் நூற்ருண்டென்றும் கூறுவர். இவர் காலத்திலே ஔவை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர், முதலியோர் வாழ்ந்தாரெனக் கூறுவர். இவர் செய்த வேறு நூல்கள்: சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி என்பனவாம்

இவரது கவித்திறனை நாம் இவர் இயற்றிய இராமாயணத்திலே காணலாம். சொற்ப காலத்திலே தமிழகத்தில் தோன்றிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இவரது புலமையை "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்" என்று புகழ்கிருர். நமது பாவொன்றில "வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்தமென்னும் ஒண்பாவி லுயர்கம்பன்" என்றே புகழ்ந்திருக்கிருர்கள்.

இவரது பெயர்பற்றிப் பல சான்றுகள் இருக்கின்றன. ஒரு சாரார் இவர் கம்பு அதாவது கோல்கொண்டு இரிந்தமையால் இவருக்குக் கம்பரென்று வந்ததென்பர். மற்ருெரு சாரார் இவர் கம்பங் கொல்லையைக் காத்தமையால் கம்பரென்று வந்ததென்பர். இன்னெரு சாரார் இவரைக் கம்பத்தடியிலிருந்து எடுத்தமையால் கம்பரென்று வந்ததென்பர்.

இத்தகைய பெரும் புலவர் இறந்து பல நாட்கள் கழிந்துவிட்டன. ஆனல் அவரது பெயர் இன்றும் மதிக்கப்பட்டே வருகின்றது. ஆங்கிலப் புலமையில் மிகச்சிறந்தவராகிய லோங்பெலோ என்பவர் பின்வருமாறு சொல்லுகிருர். "பெரிய மனிதருடைய சீவியங்கள் எங்களுக்கு நினைப்பாயிருக்கின்றது. ஆகையால் நாமும் நமது பெயரையும் மற்றவர்களால் மதிக்கப்படும்படியாகச் செய்வோம். ஆகையால் நாமும் இவரைப் பின்பற்றிச் செல்வோமாக."

# மாணவர் கடமை

வீ. சண்முகம், மே.165

உலகிற் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமைகள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தலைவன் தனது பெண்சாதி பிள்ளைகளையும் தன்னையும் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிருன். அவ்வாறே குடும்பத்தலைவியும் தனது கணவனையும் பிள்ளைகளையும் காப்பாற்றக் கடமைப்பட்டவளாய் இருக்கிருள். அதுபோலவே பள்ளிப் பருவ வயதில் இருக்கிற நாமும் பல கடமைகளுக்குட் பட்டவர்களாக இருக்கிரேம்.

எமது பிரதான கடமை என்ன? கல்விகற்பதே. கல்வி ஏன் அவசியமென்ருல், ஞானத்தைக் கொடுக்கும்; மன இருளைப் போக்கும் கடவுளைக் காட்டும்; நீதி நெறிவழி நடக்கச் செய்யும்; இவ்வுலகத்திற்குத் தேவையானபொருள் இன்பங்களை விளைவிக்கும்; அறத்தை வளரச் செய்யும்; ஈற்றில் மோட்சத்தை வருவிக்கும். இத்தகைய விழுப்பம் சான்ற கல்வியைக் கற்பதற்கென்று குறித்த பருவம் மாணவப்பருவம். ஆதலால் இப்பருவத்தில் நாம் எல்லோரும் எமது கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும்.


ஒரு கமக்காரன் இருந்தான். அவனுக்கு பயிர் விளைவிக்கத் தக்க நிலம் வயல் குறைவறப் பெற்றிருந்தான். உழுது பயிரிடுவதற்குத் தேவையான உபகரணங்கள் எல்லாம் இருந்தன. ஆயினும் அவனே சோம்பேறி. மழை பெய்தது. வித்திடுவதற்கேற்ற காலமும் வந்தது. சோம்பல் தனத்தால் அவன் விதைக்கப் போகவில்லை. ஒரு வேலையும் செய்யவும் இல்லை. அறுப்புக் காலம் கிட்டியது. அயலார் எல்லோரும் சந்தோஷத்தோடு தங்கள் வயல்களை அறுக்கச்சென்றனர். இவன் துக்கத்தோடு வீட்டிலே இருந்து விட்டான். பாவம்! இவனுக்கு விளைவு ஒன்றுமில்லை. பிச்சைக்காரனுனன்.

இதுபோலவே நாம் எங்கள் கடமையாகிய கல்விகற்றலை அதன் உரிய காலத்தில் கல்லாது விடுவோமானுல் நாமும் பிற் காலத்தில் மூடராய்த் தொழில் அற்றவராய் முக்தியடையும் வழியைத் தெரியாதவராய் இருப்போம். ஆகலால் நாம் கட்டாயம் கல்வி கற்கவேண்டும். இக்கடமையை விட வேறு பல கடமைகளும் நமக்குண்டு. நமது சீவியத்தின் ஆரம்ப காலத்திலேயே பல நல்ல பழக்கங்களைப்பழகிக் கொள்ள வேண்டும். நல்ல பழக்கங்கள் எம்மை நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், தீய பழக்கங்கள் தீயவர்களாகவும் ஆக்கிவிடும். தாய்தந்தையர்க்குப் படிந்து நடத்தல், பெரியோரைக் கனம்பண்ணல், கடவுளை வழிபடுதல், பிறர்மேல் அன்பாயிருத்தல், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை, முதலிய நல்ல செய்கைகளையும் நற்பழக்கங்களையும் பழகிவரல் வேண்டும்.

நாம் ஒன்றை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அதாவது தீய பழக்கங்களையும், கெட்ட தோழர்களையும், தீய புத்தகங்கள் முதலியவற்றையும் முற்ருய் விலக்கி நடக்க வேண்டும்.

தீமையைவருவிக்கும் இப் பழக்கங்கள் ஆரம்பத்தில் நமக்கு இன்பம், நன்மை, என்பன வருவிப்பன போலக் காணப் பட்டாலும் அவை நம் மனதைக் கெடுத்துப் பாவ வழிக்குள்ளாக்கும். ஆகையால் அவற்றை நஞ்சென வெறுத்து நல்வழியைக்கடைப் பிடிக்கவேண்டியது மாணவராகிய நமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலை என்றால் என்ன?

"கலை என்றால் என்ன?" இந்தக் கேள்விக்கு விடை சொல்லி விடுவது அவ்வளவு எளிதன்று. அழகு நிறைந்திருப்பதெல்லாம் கலை என்பார் ஒருவர். இல்லை; மனிதனது அழகுணர்ச்சியைத் தூண்டி அவனுக்கு ஒரு ஆனந்தத்தைக் கொடுப்பதுதான் கலை என்பார் மற்றொருவர். இந்தக் கூற்றுக்களிற் கொஞ்சம் உண்மை இருந்தாலும் அவை கலை என்றால் என்ன என்பதைப் பூர்ணமாக விளக்க உதவவில்லை. மாலைச் சூரியன் மயங்கும் அந்திரு சித்திரம், நறுமணத்தை அள்ளிவீசும் வண்ணமலர், அழகே உருவெடுத்த பெண், இன்னும் இவை போன்ற பலவும் மனிதனது அழகுணர்ச்சியைத் தூண்டத்தான் செய்கின்றன. அவனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கத்தான் செய்கின்றன. என்றாலும் இவை யெல்லாம் இனிய கலைப்பொருளாகி விடுமா என்ன? இதே பொருள்களைப் பார்க்கின்றார்கள் பலர். அதில் ஒரு சிலர் இவைகளிலிருந்து ஒரு அனுபவத்தைப் பெறுகிறார்கள். அப்படி அவர்கள் அடைந்த அனுபவத்தைப் பிறருக்கு எடுத்துக் காட்ட முயற்சிக்கிறார்கள். அதில் வெகு சிலரே வெற்றி பெறுகிறார்கள். அப்படி வெற்றி பெறுகிறவர்களே கலைஞர்கள். அவர்களது சிருஷ்டியே கலை. தான் கண்ட மாலைக் காட்சியைப் படமாகத் தீட்டி விடுகிறான் ஒருவன். மலரின் வண்ணத்தை மனத்திலிருந்து புனைகிறான் ஒருவன். கட்டழகியின் கவின் உருவைக் கல்லிற் செதுக்கி விடுகிறான் ஒருவன். இப்படியே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அனுபவத்தையே நீங்களும் நானும் மற்றெல்லோரும் பெற உதவி புரிகிறார்கள். இவர்களே கலைஞர்கள்; இவர்களே கவிஞர்கள்; இவர்களே சைத்ரீகர்கள்; இவர்களே சிற்பிகள்; இதைத்தான் எரிக் நியூடன் —Eric Newton— என்ற மேனாட்டு அறிஞன் பின்வருமாறு சொன்னான், "Art is to be conceived first in the mind of a man, and then made communicable to other man by the skill of a designer working on some medium that could be perceived by the senses of other men, the eye, the ear, the nose and the palate."

'கலை' என்றால் என்ன என்று தெரிகிறது. நல்ல கலைப் பொருள்களைக் கண்டு ரசிப்பது எப்படி?

"கலையை அனுபவிக்க முதலில் கண் வேண்டும். ஆம்-நல்ல கண் படைத்திருக்க வேண்டும். அந்தக் கண்களை அதற்கென நன்றாகப் பழக்கியும் இருக்கவேண்டும்." என்று மிஸ் அன்னு பெற்ரி என்ற மேல் நாட்டுக் கலாரஸிகை மிக எளிதாகச் சொல்லி விடுகிறார்.

நாம் பார்க்கின்ற கலைப் பொருள்களில், அதாவது சித்திரம் சிற்பம் முதலிய அருங் கலைப் பொருள்களில் உள்ள நயங்களைத் தெரிய மூன்று விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அவை கலா சிருஷ்டியில் உள்ள இலளிதம் (Rythm); அந்தப் பொருளில் ஒளிந்து கிடக்கும் உணர்ச்சி (Emotion); இந்த இலளிதமும் உணர்ச்சியும் நிறைந்த அதன் முழுத் தோற்றப் பொலிவு, (Form). இலளிதத்தைக் கவிதையில் எளிதாகக் கண்டு விடலாம், இசை இருப்பது காரணமாக. ஆனால், சித்திரத்திலும் சிற்பத்திலும் எப்படிக் காண்பது? தண்ணீர் எப்போதும் ஒரே மட்டமாகத் தானே இருக்கும்; ஆனால் தண்ணீரைச் சித்திரத்தில் தீட்டிக் காட்ட விரும்புகிறவர்கள்.........என்று கோடிட்டுக்காட்டி விடுவார்கள். குயவன் செய்யும் மண்பாண்டம் சச்சதுரமாக இல்லாமல் ஏன் வளைவுகளும் நெளிவு சுழிவுகளோடும் கூடியிருக்கிறது. எல்லாம் இலளிதத்தை உருவாக்கத்தான். வளைவுகளும் அசைவுகளும் இலளிதத்தைக் காட்டிவிடும் இலேசாக. இதைப் போலவே, பாவம் உணர்ச்சி என்றெல்லாம் பேசுகிறோம் கவிதையிலே. அதே பாவத்தையும் உணர்ச்சியையும் சித்திரத்திலும் சிற்பத்திலுமே பார்க்கலாம். உவகை, வீரம் சோகம் முதலிய உள்ள உணர்ச்சிகளை உருவாக்கிக் காட்டாத சித்திரமும் சிற்பமும் நல்ல கலைப் பொருள்கள் ஆகா. இந்த உணர்ச்சிகளைக் காட்ட மனித உருவம் தான் வேண்டுமென்பதில்லை. மலருவதற்குத் தயாராகிக்கொண்டிருக்கும் ரோஜா மொட்டைக்கொஞ்சம் கூர்ந்துநோக்கினால் — அதனுள் துடித்துக் கொண்டிருக்கும் உணர்ச்சி தெரியும். அந்தத் துடிதுடிப்பை ஒரு படத்திலோ அல்லது சிற்பத்திலோ, காட்டி விடவும் முடியும். இத்துடன் சித்திரத்தின், அல்லது சிற்ப உருவின் முழுத் தோற்றப் பொலிவையும் தெரிந்து கொள்ளவேண்டும். குயவன் பண்ணுகின்ற மட்பானையை விடச் சித்திரக்கலாசாலை மாணவர்கள் செய்யும் அலங்காரச் சட்டிகள் அழகாயிருப்பதேன்? எல்லாம் அதன் உருவ அமைப்பு, அதன் தோற்றப் பொலிவினால்தான். மேலும் சித்திரத்தில் அல்லது சிற்பத்தில் ஒருபகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் உள்ள பொருத்தம் கண்களை உறுத்தும் வேறுபாடுகள் இல்லாதிருத்தல், முதலியவைகளையும் நோக்கும் திறம் படைத்து விட்டாற் கலாரஸனை கை வந்து விடும்.

> கலையை அனுபவிப்பதற்குப் பண்பட்ட உள்ளம் அத்தியாவசியமாகும். அத்துடன் நல்ல கண்ணும் படைத்திருக்க வேண்டும். அழகு நிறைந்ததெல்லாம் கலை என்பர் ஒருசிலர். இதை மறுப்பாருமுளர். தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ. அவர்கள் கலை என்றால் என்ன? என்பதைத் தமது கலாமண்டபம் விமரிசனம் மூலம் விளக்குகின்றார்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[3600]


# திருக்கேதீஸ்வரத்தில் உற்சவம்

## சைவர்கள் திருநாள்

தை அமவாசைத் தினமானது இலங்கையிலுள்ள சைவர்களுக்கு ஒரு பெருந் திருநாளாயிருந்தது. இத் தினத்தில் இலங்கையின் மிகப் பராதன ஆலயங்களுள் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரத்தைப் புதுக்கி அமைக்க முயலுவோர் எடுத்துக்கொண்ட ஆரம்ப முயற்சியாகிய மடத் திருப்பணிவேலை நிறைவேறியது.

திருக்கேதீஸ்வரநாதர் திருவுருவமும் கௌரி அம்மையார் திருவுருவமும், ஆலயத்திலிருந்து பாலாவித் தீர்த்தக்கரைக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டன. பக்தர்குழாங்கள் தோத்திர பாராயணத்துடன் ஊர்வலத்திற் கலந்து சென்று அன்பு மேலீட்டினால் ஆனந்த கோஷஞ் செய்து தாமும் பாலாவியிலிறங்கித் தீர்த்தமாடினர். அக்காட்சி கண்டாரைப் பரவசப்படுத்தும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. பின் ஆலயத்தில் விசேட பூசையும் தோத்திர பாராயணமும் நிகழ்ந்தன.

யாத்திரீகர்களின் வசதிக்காகச் சமீபத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையினரால் அமைக்கப்பட்ட திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் மடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் அங்குக் குழுமியிருந்த அன்பர்களுக்கு மகத்தியான போசனம் அளித்தனர். பின் மடத்திறப்புவிழாவையொட்டி ஆலயத்தின் வெளி மண்டபத்தில் பொதுக்கூட்டமொன்று நிகழ்ந்தது. திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. சு. சிவபாதசுந்தரமவர்கள் உதவிக் கல்விமந்திரி திரு. க. கனகரத்தினமவர்கள், திரு. க. இராமச்சந்திரனவர்கள், முதலியார் செ. சின்னத்தம்பியவர்கள், திரு. சி. சரவணமுத்து அவர்கள், திரு. வ. க. செல்லப்பா அவர்கள், திருக்கேதீஸ்வர கிராமச்சங்கத் தலைவராகிய முஸ்லீம் பெரியாரொருவர் ஆகியோர் அக் கூட்டத்திற் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பேச்சாளர்கள் திருக்கேதீஸ்வரத்தைப் புதுக்கி அமைத்தல் அவசியமென்பதை வற்புறுத்தி அத் திருப்பணி வேலைக்குப் பண உதவி புரியுமாறு சைவமக்களை வேண்டினர். ஆலயத் திருப்பணி வேலையை நன்கு நிறைவேற்றுதற்குக் குறைந்தது 10 இலட்சம் ரூபாயாவது வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது. —நிருபர்.

## விவேகானந்தர் ஜெயந்தி
### சித்தாண்டியில் விழா

மட்டக்களப்பு, சித்தாண்டி இராமகிருஷ்ண சங்க வித்தியாசாலை மண்டபத்திற் சுவாமிகளின் ஜெயந்தி விழா இம் மாதம் 2-ம் திகதி பிற்பகல் கொண்டாடப்பட்டது. பூசையின்பின் கி. ச. அக்கிராசனர் திரு. சிவஞானம் அவர்களின் தலைமையிற் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர் பேருரையின் பின் சுவாமி நடராஜானந்தர் அவர்கள் சுவாமி விவேகானந்தா அவர்களின் சீவிய சரித்திரத்தையும் அவரது சேவைகளையும் எடுத்துக் கூறினர். பின் திருவாளர்கள் பண்டிதர் கந்தையா, வி. குப்புசாமி, B. A., M. Litt., வேலுப்பிள்ளை ஆகியோர் சுவாமிஜீயின் பொன்மொழிகளை யிட்டுப் பேசினார்கள். செல்வன் நடராசா கீர்த்தனங்கள் பாடினார். ஆசிரியர் நல்லையா நன்றியுரையுடன் விழா நிறைவேறியது.

## நெடுந்தீவில் சுதந்திர விழா

4-2-49 முற்பகல் நெடுந்தீவு அரசினர் கனிட்டபாடசாலையில் கிராமச் சங்கத் தலைவர் ஸ்ரீமதி செல்லம்மா நாகேந்திரர் அவர்கள் தலைமையில் இலங்கைச் சுதந்திர விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேற்படிபாடசாலை ஆசிரியர் மாணவர்களும் செல்லம்மா வித்தியாசாலை ஆசிரியர் மாணவர்களும் பிறரும் பங்குபற்றி விழாவை அணிசெய்தனர்.

செல்லம்மா வித்தியாசாலையில் அரசினர்பாடசாலைத்தலைமை ஆசிரியர் திரு. நவரத்தினசிங்கம் அவர்களால் இலங்கை சுதந்தரம் பெற்றவரலாறு விளக்கப்பட்டது.

பின் அரசினர் பாடசாலையில் விசேஷ பொதுக்கூட்டம் தலைவரின் முன்னுரையுடன் ஆரம்பமானது.

ஆசிரியர்கள் நா. கந்தையா, இராமசாமி, ஆ. கந்தையா, க. செல்லையா என்போரால், சுதந்திரத்தின் தத்துவம், இலங்கை சுதந்திரமடைந்தவகை இந்திய சுதந்திரமும் இலங்கைச் சுதந்திரமும், சுதந்திரத்தை உபயோகிக்கும்வகை, உண்மைச் சுதந்திரம் என்பவற்றை விளக்கிச் சொற்பொழிவுகள் செய்யப்பட்டன. —கடிதம்

## நாவற்குடா
## கிராமமுன்னேற்றச் சங்கம்

நாவற்குடாக் கிராம முன்னேற்ற சங்கத்தின் ஆதரவில் அவ்வூர் அரசினர் பாடசாலை மாணவர்களால் இலங்கைச் சுதந்திர விழாவை முன்னிட்டு ஓர் ஊர்வலமும், [illegible] [illegible] பிரார்த்தனையும் நடாத்தப்பட்டன. —கடிதம்


## ORDER NISI
IN THE DISTRICT COURT
OF JAFFNA

*Testamentary Jurisdiction* No. 985

1. Nagamuthu Sangarappillai of Mahiapiddi
*Petitioner*

*Vs.*

1. Sathiapama *alias* Rasammah a minor appearing by her G. A. L. the 2nd Respondent
2. Nagammah widow of Sinnathurai of Mahiapiddi in Jaffna
*Respondents*

In the matter of the Estate of the late S. Sinnathurai deceased, of Mahiapiddi.

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire, District Judge, Jaffna on the 17th day of January 1949, in the presence of Mr. S. T. Nadarajah, Proctor on the part of the petitioner, and the affidavit of the above-mentioned petitioner dated 28th December, 1948, having been read, and the evidence of the witnesses and the Notary [per affidavit] taken and all parties heard:

It is ordered that the Will of the late S. Sinnathurai of Mahiapiddi, deceased, dated 4th October 1948 and numbered 2869 be and the same is hereby declared proved unless the respodents or any other persons shall, on or before the 24th day of February, 1949. show sufficient cause to the satisfaction of this court to the contrary.

It is further declared that the said Nagammah widow of S. Sinnathurai 2nd respondent, be appointed guardian *ad litem* over the First respondent and that the said Nagamuthu Sangarappillai, petitioner, is the executor named in the said Will and that he is entitled to have Probate of the same issued to him accordingly unless the the respondents or others shall on or before the 24th day of February, 1949 show sufficient cause to the satisfaction of this court to the contrary.

This 17th day of January, 1949
Sgd. **R. R. Selvadurai**
District Judge

Drawn by
**Sgd. S. T. Nadarajah**
Proctor for Petitioner
[3612-ii]


இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ப் பலி

தொடர் கதை

—சொக்கன்—

## 11

அடுத்தநாள் நானும் நாகராஜனும் அதிபரின் முன்னிலையில் நின்றோம். என் நெஞ்சு 'பக் பக்' என்று அடித்துக் கொண்டது. இப்பொழுது யார் குற்றவாளி என்று எந்த நீதிபதியாலும் நிர்ணயிக்க முடியாதவகையில் நாங்கள் இருவரும் இருந்தோம்.

எங்கள் இருவரது முகங்களும் ஒரேயடியாகக் கறுத்து விட்டன. நாகராஜனை நான் நிமிர்ந்து பார்க்கவேயில்லை. அவர் கலாசாலையின் ஒழுங்குமுறைகளை மீறி நடந்ததால் குற்றவாளியென்று கணிக்கப்பட்டாலும், தூய்மையான காதல் சன்னிதானத்திலே அவரை யாருமே குற்றவாளியென்று தலை குனியவைக்க முடியாதல்லவா? ஆனால் அந்த இடத்திலே நான்மட்டும் பெரிய மகத்தான குற்றத்தைச் செய்தவள் என்று தலை குனியவேண்டியேவரும்.

அதிபர் என் நிலைமையைப் பிழையாக அர்த்தம் செய்து கொண்டார். ஆம்! இத்தகைய சந்தர்ப்பங்கள்தானே அவர்களுக்கு எங்கள் ஒழுக்கத்தையும் ஒழுக்கமின்மையையும் அம்பலப்படுத்துவன? அவர் என் தகுதிக்கு மேற்பட என்னைக் கௌரவித்தார். அவர் மனதில் என்னைப்பற்றியதோர் உயரிய அபிப்பிராயமே உண்டாகி இருக்குமென்று நான் துணிவாகக் கூறுவேன்.

என்றுமே சாந்தமற்றுப் பயங்கரமாக உறுத்து விழிக்கும் அவர் விழிகள் இன்று பார்க்கவே பயங்கரமாயிருந்தன. அல்லது நான் அப்படியாகக் கற்பனை செய்துகொண்டேனா! என் உடல் நடுங்கியது.

அவர் கேட்டார்: 'இந்தக் கடிதம் உன் கையில் எப்படிக் கிட்டியது?' என்று

'எனக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நேற்றுப் பிற்பகல் நிர்மலா புத்தகம் ஒன்றை என்னிடம் வந்து இரவலாகக் கேட்டாள். கொடுத்த அன்று இரவு அதனுள் இந்தக் கடிதம் இருந்ததாக கொடுத்தாள்.'

'நாகராஜன்! இதற்கு நீ என்ன சொல்கிறாய்?' அவருடைய குரல் சாதாரணமாகத்தான் இருந்தது. ஆனால் எதிர்வரப்போகும் ஆபத்தைப் பற்றிய உறுதிப்பாடும் இருக்கவே செய்தது.

அவர் சொன்னார்: (குரல் எழவேயில்லை. என்றுமே உற்சாகமாயும் இனிமையாயும் இருக்கும் குரல் தானா இது? ஏதோ குகையுளிருந்து வெளி வருவதுபோன்றல்லவா இருக்கிறது?)'நான்எதையும்மறைக்க விரும்பவில்லை. நான் கடிதம் எழுதியது உண்மைதான்.' மரணதண்டனையை ஏற்கப்போகும் கைதி, தன் சகல உணர்ச்சிகளும் மரத்துப் போய் விரக்தியுடன் கூறும் வார்த்தைகள் போன்றல்லவா இவ் வார்த்தைகள் இருக்கின்றன?

'நாகராசன் உன்னை எவ்வளவோ நல்லவனென்று நம்பியிருந்தேன். நீ இப்படிச் செய்வாயென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. இன்னொரு மாணவனாயிருந்தால் நான் அவனை விலக்கிவிடத் தயங்கவே மாட்டேன்.' அதிபர் நாகராஜனை விலக்குவதுபற்றி நெடுவேளை யோசித்தாரென்பதை அவர் முகக் குறி காட்டியது. நான் இதை எதிர்பார்க்கவேயில்லை.

'என் எதிர்காலவாழ்வு உங்களில்தான் தங்கியிருக்கிறது. அதற்குமேல் நான் என்ன சொல்லப்போகிறேன்'? என்று நாகராஜன் சொன்னபொழுது அவர் குரல் நடுங்கியது? என் மனம் உருகியது! அவர் காலடியில்வீழ்ந்து மன்னிப்புக்காக இரங்கி அழவேண்டும் போல் இருந்தது. ஆனால் அச்சமயத்தில் எதற்குமே இயலாத அசத்தையாயிருந்தேன் நான்.

'உன்னை என்ன செய்வதென்றே தெரியவில்லை, நாகராஜன்! உன்னை முதலாவது தடைவையாக எச்சரிக்கிறேன். இனிமேல் இத்தகைய விஷயங்களில் இறங்கினயானால் என்னிடம் நீ மன்னிப்பை எதிர்பார்க்கவே முடியாது. பாடசாலையின் கண்ணியம் உன்னைவிட எவ்வளவோ மதிப்பு வாய்ந்தது என்பதை நீ உணரவேண்டும். இந்த முறையில் என்முன்னிலையிலேயே புவனாவிடம் நீ மன்னிப்புக்கேள். பாடசாலை என்பது காதல் அரங்கமல்ல. சகாமாணவிகளை சகோதரிகளாக மாணவர் கருதவேண்டியதும் சகமாணவர்களை சகோதரர்களாக மாணவிகள் கருத வேண்டியதும் மிகஅவசியம். ம் ... மன்னிப்புக்கேள்' என்று மூச்சுவிடாமல் அதிபர் பேசினார். அவர் பேசினாரா? பிரசங்கம் செய்தாரா?

நாகராஜன் தளதளக்கும் குரலிற் சொன்னார். 'புவனேஸ்வரி' நான்செய்தபிழையை மன்னித்துவிடு.

நான் சொன்னேன் 'இனி அந்த விஷயத்தைப்பற்றியே பேசவேண்டாம்'

நாங்கள் இருவரும் ஓரளவு மனத்திருப்தியுடன் திரும்பினோம்.

† † †

இதுதான் எங்கள் காதலின் கடைசி நாடகம்!

அதன் பின்பு ஒரு வருஷம் சாரமற்றுக் கழிந்தது. அவர் நான் இருக்கும் பக்கமே திரும்புவதில்லை. அவருடைய முகத்தில் உற்சாகத்தைக் காண்பதே மூயற் கொம்பாகி விட்டது.

எனக்கு உண்மையாகவே இந்த நிலைமையில் விருப்பம் இருந்தது என்று சொல்ல முடியாது. ஆனால் சிநேகிதிகளின் நச்சரிப்பால் முகமலர்ச்சியுள்ளவளாக நடித்து வந்தேன் என்றே சொல்ல வேண்டும்.

## 12

என் சிந்தனை கலைந்தது. பழைய நிகழ்ச்சிகள் எல்லாம் மனம் என்னும் திரையில் தங்கள் காட்சிகளை ஒவ்வொன்றாகக் காட்டி மறைந்து விட்டன. ஓர் பெரும் புயல் அடித்து ஓய்ந்துவிட்டது போன்றிருந்தது.

'ஓய்ந்து விட்டதா? நிச்சலனமாக ஓடும் நதிபோன்றது உன் சிந்தனை. அதன் அடியில் எண்ணக் கணக்கற்ற சுழிகள் கிடப்பதை மறந்து விட்டாயா?' என்று என் மனம் கேட்டது.

சாமக் கோழி கூவியது. நீ ஏமாற்றமடைந்து விட்டாய் பறவை பறந்துவிட்டதே என்று அது சொல்வது போன்றல்லவா இருக்கிறது?

தூரத்தில் இருந்த வைத்தியசாலையொன்றின் சவுக்கமரங்கள் காற்றில் சலசலத்தன. அவை தங்கள் விகாரமான ஒலியில் என் தோல்வியை எடுத்துச் சொல்கின்றன என்று நினைத்துக்கொண்டேன்.

கடிகாரம் நாலுதரம் அடித்து ஓய்ந்து விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் இருள் நீங்கிப் பொழுது புலர்ந்துவிடும். ஆனால் என் உள்ளத்தைக் கௌவிக்கொண்டிருக்கும் இருளோ எத்தகைய சூரியனின் ஒளியாலும் நீங்க முடியாதது!

அடங்கிக் கிடந்த வேதனை அழுகையாகப் பெருக்கெடுத்தது. நான் அழுதேன்; விம்மினேன்; கதறினேன்; ஆனால் நான்நினைத்த அமைதி கிட்டினால்தானே!

இந்தத் தனிமையான சந்தர்ப்பத்தில் என்றுமேயில்லாதபடி நாகராஜன் ஓர் தேவதை போன்று என்மனக் கண்ணுக்குத் தோற்றினார். என் கண்களை மறைத்துக் கொண்டிருந்த கோவம்போன இடமே தெரியவில்லை!

இப்பொழுது மட்டும் நாகராஜன் என் முன்னிலையிலிருந்தால் நான் அவர் காலடியில் வீழ்ந்து என் பிழைகளுக்காகக் கதறி அழுவேன்; அவர் காலால் உதைத்துத் தள்ளினாலும் அதை என் பாக்கியமாகவே கருதுவேன்!

ஆம்! காதல் பொன் மெருகல்ல; பொன்னேதான்! அது மிகவும் பெறுமதி வாய்ந்தது. ஒரு பெண்ணின் தன் மதிப்பும், பெருமையும் மட்டும் அதன் பெறுமதிக்கு ஈடுகட்டக்கூடியனவல்ல. காதலுக்கு இதயம் வேண்டும்; இதயம் நிறைந்த அன்பு வேண்டும். வெளிப்பகட்டல்ல.

இந்த உண்மை அன்று என் மனதில் உதித்திருக்குமானால்.........!

'சத்தியபாமாவின் பொன்னணிகளாலும் பட்டாடைகளாலும் சரிவராத கண்ணனின் பாரம் ருக்மணியின் ஓர் சின்னஞ் சிறுமாலையால் சரி வந்தது' என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதையல்ல. கோவமும் அன்பும் ஒன்று சேர்வது மகா கஷ்டமான காரியந்தான்!

அதற்கு ஒரு சாட்சி சத்தியபாமா; மற்றையது நான்.

## 13

இன்று நான் பூஜிக்கப்படும் தேவதையல்ல; பூஜிக்கும் அடியாள். இது எனக்குக் கிடைத்த ஓர் பெரும் பாக்கியம்!

நாகராஜன் அடிக்கடி என் மானஸீகமான சிந்தனையில் ஓர் அழகிய சித்திரம் போன்று தோற்றுவார்; என் கைகள் என்னையறியாமலே கூப்பும்... ஓர் பெரிய ஏமாற்றத்தை அளித்து மறைந்துவிடும்; என் கண்களில் நீர்த்திவலைகள் உருளும்!

வாழ்க்கையில் வசந்த காலம் ஒரு முறைதான் வரும்; அடுத்த தடவைக்குச் சந்தர்ப்பமே யிராது. எத்தகைய சிந்தனையும், வேதனையாயுமிருந்தாலும் நாகராஜனைக் காண்பதிலே எனக்கு ஒரு திருப்தி இருந்து வந்தது. அதுவே வசந்த காலம்! இனி அத்தகைய அருமையான சந்தர்ப்பங்கள்உண்டாகுமோ? எனக்கு நம்பிக்கை இல்லை. இனி முடிவற்ற, வரட்சியான வேனில்தான்!

அன்று பாரதியார்சொன்ன வாக்கியங்கள் எவ்வளவு உண்மையானவை?

"காதற் கோயில் மிகத் தூய்மை கொண்ட கோயில்; ஒரு முறை அங்கு போய்ப் பாவஞ் செய்து வெளியே துரத்துண்டவன் மீளவும் அதனுள்ளே புக முன்னர் அவன் படவேண்டிய துயரங்கள் எண்ணிறந்தன."

## 14

நான் இப்பொழுது பாடசாலை ஒன்றில் ஆசிரியையாயிருக்கிறேன்.

உயர் வகுப்புகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது எனக்கு விருப்பமாக இருக்கவேயில்லை. ஆனால் நான் ஓர் சாதாரண ஆசிரியை தானே! விருப்பு, வெறுப்பு, என்று ஏற்கவும் தள்ளவும் எங்களுக்கு உரிமை ஏது?

உயர்வகுப்பு மாணவரும் மாணவிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளும் பார்வை! அவர்களுக்கு ஆசிரியர் இருக்கிறாரோ இல்லையோ? என்ற அக்கறையே இல்லை. இவர்களுக்கு என்போன்ற இளம் ஆசிரியை ஒருத்தி எப்படி புத்தி புகட்டுவது? இது மிகவும் கடினமான வேலைதான்!

அவர்கள் இந்த உலகத்திலேயே இருப்பதில்லை. சில சமயங்களில் கேள்விகள் கேட்டால் தடுமாறுவார்கள்; நித்திரையிலிருந்து அப்போதுதான்விழித்தவர்கள் போன்று திடுக்குறுவார்கள்! திருடர்கள்போன்று விழிப்பார்கள்! இது எனக்குச் சிரிப்பாக இருக்கும்; கோபமும் வருவதுண்டு. கஷ்டத்துடன் என் உணர்ச்சிகளை அடக்கிவிடுவேன்!

ஒரு நாள் ஒரு மாணவி கீழே கிடந்து எடுத்ததாக ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அவள் அப்படிச் சொன்னது விஷமத்தனமும், பொய்யும், என்று நான் உணராமலில்லை; நானும் இவர்கள்போல் மாணவியாயிருந்தவள் தானே! சகாமாணவிகளின் குறும்புத்தனத்தை அறிந்து அனுபவித்தவள் தானே நான்!

அது ஒரு பெண் மாணவி தன் காதலனான சகபாடி ஒருவனுக்கு எழுதிய காதற் கடிதம் எத்தனையோ கவிகளின் வாக்கியங்களைத் திருடி ஓர் கவிதைக் கதம்பமாகவாக்கி அவனுக்குச் சமர்ப்பித்திருந்தாள்! அந்தப் பாடல் அழகானதோ அன்றோ என்று நான் அபிப்பிராயம் சொல்லத் தகுதியற்றவள்; அதற்குத் தகுதியுள்ளவன் அவள் காதலன் தான்!

நாகராஜனின் நினைவு எனக்கு வந்தது. என்றுமே மாணவர்களிடை உன்னதஸ்தானம் வகித்த அவர் ஒரு கடிதத்தால் எவ்வளவு கீழானவராக, தம் மதிப்பிற் குறைந்தார் என்றதெல்லாம் என் ஞாபகத்திற்கு வந்தது. எனக்கு இந்தக்கடிதம் எழுதியவள் பேரில் அனுதாபமே உண்டாகியது. 'இதனால் அவள் எவ்வளவு கீழானவளாக ஒதுக்கப்படுவாள்.' என்பது சிந்தித்து முடிவுகாணவேண்டியதொன்றல்ல!

நான் அக் கடிதத்தைக் கிழித்து எறிந்து விட்டேன். அதைப்பற்றிக் கவலையே எடுக்கவில்லை.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான முயற்சி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ராறுகளைத் தீர்த்துவைக்க முயற்சித்துள்ளார். இரு கட்சியினரும் சிற்சில ஸ்தானங்களை விட்டுக்கொடுக்க மறுப்பதாற்றான் தகராறு ஏற்பட்டுள்ளதாம்.

**'கரேன்' சமூகத்தினர்**

பர்மாவில் உள்நாட்டுக் கலகமும் வேலைநிறுத்தமும் ஒன்றுசேர்ந்து நாட்டைச் சீர்குலைத்து வருகின்றன. கொம்யூனிஸ்டுகள் அங்குள்ள **கரேன்** என்ற சமூகத்தினருக்கு ஆசைவார்த்தைகள் கூறிப் பர்மா அரசாங்கத்துக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிட்டுக் கூத்துப்பார்க்கின்றனர். இந்தக் **கரேன்** சமூகத்தினரைப்பற்றித் **தினமணி** ஆசிரியர் தரும் விபரங்கள் வருமாறு:

"கரேன்" என்ற சமூகத்தினர் பர்மாவில் ஒரு முக்கியமான தனி இனத்தவர். மொத்தமுள்ள 170 லக்ஷம் மக்களில் பர்மீய இனத்தவர் 90 லக்ஷம். மற்றவர்களில் ஆறு இன சிறுபான்மையினரும் சுமார் 9 லட்சம் இந்தியர்களும் இருக்கின்றனர். 'கரேன்' சமூகத்தினர் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள். வலதுசாரி பொருளாதார தத்துவத்தினர். அவர்களுடைய எண்ணிக்கை 12 லக்ஷம் இருக்கும். பிரிட்டிஸ் ஆட்சியின்கீழ் இராணுவத்தில் இவர்கள் தாம் அதிகமாகச் சேர்க்கப்பட்டனர். இதன் காரணமாக பர்மியசைனியத்தில் உத்தியோகஸ்தரிடையே கரேன்களின் எண்ணிக்கைதான் அதிகம். இந்த நிலைமையை கம்யூனிஸ்டுகள் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டனர். தங்களுடன்சேர்ந்து கலகம் செய்தால், கரேன்களுக்கென பர்மாவின் ஒரு பகுதியை தனி இராஜ்யமாக்கித் தருவதாக அவர்கள் சென்ற வருஷமே வாக்களித்து, அவர்களுடைய பிரிவினையாசைக்குத் தூபம் போட்டனர். இந்த விஷவித்திலிருந்துதான் கரேன்கலகமாக வளர்ந்தது.

கரேன்கள் எந்த தனிப்பட்ட ஒரு ஜில்லாவிலோ பகுதியிலோ பெருவாரியாக வசிப்பவர்களல்ல. நாட்டின் பலபாகங்களிலும் அவர்கள் படர்ந்திருக்கிறார்கள். முக்கியமாக இரங்கூனுக்குக் கிழக்கேயும் மேற்கேயும் ஐராவதி டெல்டாவிலும், வடக்கே டாங்கூ வரையிலும் அவர்களை அதிமாகக்காணலாம். அவர்கள் முக்கியமாக நிலஸ்வான்களும் கிருஷிகர்களுமாவர். நிலத்தை தேசவுடைமையாக்கும் அரசினர் கொள்கையை அவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். இப் பிரச்சனையில் அரசினரை விடத் தீவிரமாக இருக்கும் கம்யூனிஸ்டுகள் கரேன்களை கலகத்தில் ஆதரிப்பதுதான் விசித்திரம். "இராணுவத்தில் செல்வாக்குள்ள கரேன்கள் கலகம்செய்தால், அரசாங்கத்தில் மூலபலம்சிதைந்துவிடும். பிறகு ஏற்படும் குழப்பத்தில் அதிக கட்டுப்பாடுள்ள கம்யூனிஸ்டு கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டுவிடலாம்.

The
EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Feb. 13, 1949 | No. 28




# தமிழ் நடை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

4, 5 வாங்குவோன் கணக்கே வேண்டாம் என்றல், அவன் கட்சியிது! கணக்கில்லாவிடில் 'என்ஜினீயரிங்' விஞ்ஞானம் என்ன ஆகுமோ அதேபாடுதான் இலக்கணமில்லாத மொழியும்! நாட்டிற்குச் சட்டம் இல்லாமலும், கட்டடத்திற்கு முறையை நினையாமலும் நடத்த முடியுமானல் அக்காலத்தே மொழியை இலக்கணமின்றி நடத்தலாம். சட்டத்தையோ, முறையையோ எல்லோரும் படித்தா வாழ்கின்றனர்; கொத்தனெல்லாம் கல்லடுக்ககிறன்? தலைவர் அறிந்திருப்பர்; வழிகாட்டுவர்; தலைமைக் கொத்தன் ஆணியடித்திருப்பான்; திருத்துவர், அதன்படி மற்றேர் நடப்பர். அவ்வளவுதான்! சட்டமும் முறையும் பிடிக்காவிடில், புரிந்து கொள்ள முடியாவிடில் ஏற்றபடி அமைத்துக் கொள்ளலாம்; அது வேறு. அதற்கெனச் சட்டமே வேண்டாமெனில், நாடும் மொழியும் நாசமாய்ப் போகவேண்டியதுதான்.

எந்த எழுத்தானலென்ன! 'ர' போட்டாலென்ன 'ற' போட்டாலென்ன! இது 'ரயில்வே' தமிழின் மூளை! சில சீர்திருத்தக்காரர்மூளை! அ'ற'த்திற்கு அரம் எழுதினல் குறளைப் படிப்பதை விட்டுக் கொல்லன் கடைக்குப் போய்விடுவான், அரம் வாங்கிவர. அரத்திற்கு (வாள் கூராக்கும் அரம்) அறம் எழுதினல் குறளைப் படித்துக்கொண்டிருந்து வாளைக் கூராக்காமலே விட்டுவிட்டு மரம் அறுபடாமல் உதையும் வசையும் வாங்குவான் அவ்வளவுதான். இந்தச் சீர்திருத்ததையெல்லாம் ஆங்கிலேயரிடம்—இங்கிலாந்து போகிறர்களே—காட்டமாட்டேனென்கிறர்களே. அவர்களாவது கொஞ்சம் திருத்திவிடுவார்கள்! பையா, 'Pad' (கீழே வைத்தெழுதும் அட்டை) எழுதென்றபோது அவன் எந்த எழுத்துப்போட்டாலென்னவென்று 'Bad' என்று எழுதினல் அவன் மூளை Bad (பழுதாக) ஆய்விட்டதெனத்தானே கருதுவார்கள் அறிஞர்!

இது கடுநடை. விளங்கவில்லை. மக்கட்கும் விளங்கவில்லை. இந்த நூல்களைக் கடலில் எறிந்து விடவேண்டும். இது ஒரு சட்டம்! இந்தத் தமிழ் நாட்டிலேதான் விந்தையான மூளைகள்! ஷேக்ஸ்பியரும், ஷோசரும் எல்லோருக்கும் விளங்குகின்றதா? பி. ஏ., எம். ஏ. படித்த ஆசிரியரும் திண்டாடுகின்றனர்; ஆங்கிலத்தையே சிறப்பாக எடுத்துப் படிப்போரும் திணறுகின்றனர். 'டிக்ஷனரி' அறிவில்லாமல், கருத்தைக்கூட விளங்கிக்கொள்ள முடியாது. அவற்றையும் கடலில் எறிந்து விடுவோமா? ஷேக்ஸ்பியரை விளங்கிக்கொள்ளத் தனி இலக்கணம்; அகராதி!

(தொடரும்)

## மலர்ப் பலி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் அவர்களின் வகுப்புக்கு அதன் பின்பு போன இரண்டு மூன்று நாட்கள் பெண் மாணவிகள் ஏதோ பெரிய சம்பவம் நடக்குமென்று எதிர்பார்த்தார்கள். ஆனல் அவர்கள் மெல்லவும் விழுங்கவும் முடியாமல் திண்டாடினர்கள்.

அவர்களிடையே அந்தக் கடிதக்காரியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது; அவள் நான் போகும் சமயங்களில் தலையைக்குனிந்து விடுவாள்: பேயறைந்தவள் போல் முகம் ஒரேயடியாகக் கறுத்துவிடும்.

ஆனல் அந்த விஷயத்தைப் பற்றி நான் காட்டிய மௌனத்தால் அவளுக்கு ஏற்பட்டிருந்தபயமும், அவள் சகாக்களிடை உண்டான ஆவலும் உற்சாகமும் மங்கி மடிந்து போயின.

இதை நான் ஏன் சொன்னேன்! முன்பு மகாகஷ்டமாகவும் செய்யக்கூடாததொன்றாகவும் கௌரவத்தையே பாதிக்கக்கூடியதாகவும் நான் நினைத்திருந்த இந்த விஷயம் என் அனுபவத்தால் சாதாரணமானதாய்ப் போயிற்று.

இது போலச் சாதாரணமானதாக நாகராஜனின் கடிதத்தையும் நான் அன்று நினைத்திருந்தேனனல்?

## விமானத் தபால் ஒழுங்கு

**யாழ்ப்பாணக்கொண்டாட்டம்**

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட ஆகாயத் தபாற்போக்குவரத்தைப் பிரதம தபாற் பகுதி அதிகாரி ஸ்ரீ இக்னேசஸ் பெரேரா சென்ற திங்கட்கிழமை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் வைத்தார். இதை முன்னிட்டு யாழ்ப்பாணம் நகர மண்டபத்திற் பிற்பகல் 5 மணிக்கு ஒரு கொண்டாட்டம் ஏற்படுத்தப்பட்டது. இவ் விழாவுக்கு மேயர் சாம் சபாபதி தலைமை வகித்தார். பிரதமர் சேனநாயகா அவர்கள் விமான மார்க்கமாக அனுப்பிய செய்தி படிக்கப்பட்டது. பல பிரமுகர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர். தேநீர் விருந்தும் நடைபெற்றது.

## விமானப் பிரயாணம்

**அங்கத்தினருக்கு இலவசம்**

பிரதிநிதிகள் சபை சம்பந்தமான அலுவல்களை முன்னிட்டுப் பிரயாணம் செய்யும் அங்கத்தவர்களுக்குக் காங்கேசந்துறையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் விமானங்களில் இலவசமாகப் பறப்பதற்கான சலுகைகள் உதவப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ பெப்ருவரிமீ 13உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org